776

கல்வி

KALVI......TAMIL MONTHLY......MADRAS.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAR 1950
MADRAS

மலர் 9 இதழ் 2 & 3
*
பிப்ரவரி & மார்ச் 1950
*
விலை அணா 4

கல்வி

(கௌரவ ஆசிரியர்: S. திருவேங்கடாசாரி)

உபாத்தியாயர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பயன்படும்

மாதப் பத்திரிகை.

புதிய தொகுதி: மலர் 9	1950 பிப்ரவரி & மார்ச்சு	இதழ் 2&3

(1) சந்தாதாரர்கள் கவனிக்கக் கோருகின்றோம்:

சந்தாதாரர்கள் யாவருக்கும் வணக்கம்: கல்வி பத்திரிக்கைக்காக நீங்கள் அனுப்பும் சந்தாத்தொகை முடிந்து விட்டால் நாங்கள் தொடர்ந்து பத்திரிக்கையை உங்களுக்கு அனுப்புவதற்காக 1950-ம் வருடத்து சந்தாப்பணத்தை (ரூபாய் மூன்று) உடனே அனுப்புமாறுக் கேட்டுக்கொள்ளுகின்றோம். சாந்தாதாரர்கள் கடிதம் எழுதும் பொழுதும் மற்றவிவரங்களை அனுப்பும்போது தங்களுடைய சந்தா நெம்பரை குறிப்பிடும் படியாக கோருகின்றோம்:

வருட சந்தா மூன்று ஆறுமாத சந்தா ரூ 1—8—0

(2) கல்வியில் ஊக்கமுள்ள, பெற்றோர்களுக்கும் வாசகர்களுக்கும்-ஆசிரியர்களுக்கும்-மாணுக்கர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

கல்வியில் பிரியமுள்ள பெற்றோர்களையும்-வாசகர்களையும்-கல்விப் பத்திரிகையில் பிரசுரமாகத் தகுதியான-கல்வி சம்பந்தமான-போது அறிவு சம்பந்தமான-கட்டுரைக் கதைகளை எழுதியனுப்புமாறு கோருகிறோம்:

ஆசிரியர்களையும்-மாணுக்கர்களையும்-தங்களுடைய பள்ளிக்கூடம்- படிப்பு-சம்பளம்-குறைவுகள்-நிறைவுகள்-சங்கங்கள்-போதனைகள்-முதலிய எல்லாவிதமானவைகளைப் பற்றியும் கட்டுரை-கதைகள் எழுதியனுப்புமாறு கோருகிறோம்:

(3) உங்களின் பெயரை "கல்வி சந்தாவில்" சேர்த்துவிட்டீர்களா? இல்லையானல்-இப்பொழுதே-இன்றே-கல்வியில் சந்தாதாரராகச் சேர்ந்து மன இருளைபோக்கி இன்பமடையுங்கள்.

(4) கல்வி சம்பந்தமான எல்லா விவரங்களுக்கும் பின்வரும் விலாசத்திற்கே எழுதுங்கள்.

MANAGER KALVI 72, ARMENIAN ST. MADRAS 1.	மானேஜர் "கல்வி" "கல்வி" காரியாலயம், 72, அரண்மனைக்காரத் தெரு மதராஸ் 1.

கல்வி

“கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.”

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAR 1950
MADRAS

மலர் 9 | 1950 பிப்ரவரி & மார்ச்சு | இதழ் 2 & 3

விண்ணப்பம்

வருகிறமாதம் முதல் இக்கல்வி மாதாந்தர வெளியீடு ஸ்ரீமான் எம். எஸ். நடேசய்யர், எம். ஏ. எல். டி. என்கிற உபகாரச் சம்பளம் பெற்றுவரும் பேராசிரியரால் நடைபெற்று வரும். இவர் சென்னை ராஜதானி கல்லூரியிலும், சைதாப்பேட்டை ஆசிரியர்களின் கல்லூரியிலிருந்தும் 2 வருஷங்களுக்கு முன்புதான் ரிடையரானார். சுமார் 3½ வருஷ காலம் பல சர்க்கார் கல்லூரிகளில் வேலை பார்த்தார். 1917 முதல் 1920 வரை 2½ வருட காலம் பெரியகுளம்ரேஞ்சில் சப்அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டராகவிருந்தார். அது சமயம் அங்கு ஆசிரியர்களின் உதவியாய் நடத்திய பொருட்காட்சியைத் திறந்துவைத்து தலைமை வகிக்க அப்போது உபாத்தியாயர் கில்ட் தலைவராயிருந்த ஸ்ரீமான் கே. பி. ராமனாத அய்யரை அழைத்திருந்தார் அவருடன் எம். எஸ். நடேசய்யரது சகோதரர் எம்.எஸ். சபேசஅய்யரும் பிரசங்கம் செய்ய அழைக்கப்பட்டார். அதன் மூலம்தான் எம். எஸ். சபேய்யர் தென் இந்திய உபாத்தியாயர் கில்டில் ஈடுபட்டு அதன் விஷயமாய் உண்மையாக உழைக்கும்படி ஏற்பட்டது. எம். எஸ். நடேசய்யருக்கும், அவரது தமையனாருக்கு ஆசிரியர்களுக்காகவும் கல்வித்துறையினும் உண்மையாக உழைக்க வேண்டுமென்ற அவா இருந்தது போலவே இருந்து வந்துகொண்டிருக்கிறது. சென்னை ராஜதானி காலேஜில் பேராசிரியராயிருந்த போதும்கூட ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்குமென்றே ஒரு பொருட்காட்சியை 1946-ம் வருஷத்தில் நடத்தினார். ஸ்ரீமான் S. கோபாலகிருஷ்ணன் நடத்திவந்த இக்கல்வி பத்திரிக்கைக்கு பல தடவைகளில் கட்டுரைகள் எழுதி வந்திருக்கிறார். இப்படிபாராட்டிய கல்வி மாதாந்திர மொழியீட்டை அவரையே நடத்திவரும்படி கேட்டுக்கொண்டவுடன், அவர் தனது கணக்கற்ற சகோதர ஆசிரியர்களுடன் ஒத்துழைத்து

வர ஏற்ற சமயம் வாய்த்ததேவென்று ஏற்றுக் கொண்டு விட்டார். எம். எஸ். நடேச அய்யரின் மற்றொரு சகோதரர் ஸ்ரீமான் எம்.எஸ். சுந்தரேச அய்யரும் கல்வி இலாகாவிலும், S. S. L. C. பரீட்சையிலாகாவிலும் தென் இந்திய ஆசிரியக் கூட்டங்களிலும் வார்தா கல்வித்திட்டத்திலும் உண்மையாக பட்டபாடு எல்லோரும அறிந்த விஷயமே. இம்மாதிரியே தானும் தனது எஞ்சிய வாழ்நாளை கல்வித் துறையில் சகோதர ஆசிரியர்களுடன் கழிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் முன்வந்திருக்கிறார். தென்னிந்திய தமிழ் நாட்டாசிரியர்கள் யாவரும் அவரது எண்ணம் நிறைவேறும்படி ஒத்துழைக்க வேண்டிய உதவி புரியுமாறு வ ணக்கத்துடன்கேட்டுக்கொள்ளப் படுகிறது. தென் இந்திய ஆரம்பக்கல்விப் பாடசாலை ஒவ்வொன்றும் இக்கல்விமாதாந்தர வெளியீட்டின் சந்தாதாரராவதுடன் அதன் ஆசிரியர்கள் கல்விசம்பந்தமான விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளையும், அபிப்ராயங்களையும் கதைகளையும் எழுதியனுப்புமாறு கோரப் படுகிறது.

கடவுளையே சித்ரூபமாகவும், ஜோதி ரூபமாகவும் த்யானம் செய்யும் நாடல்லவா நமது நாடு. கேவலம் ஞானரூபம்தான் மோக்ஷத்திற்கு உயர்ந்த சாதானமாகக் கருதும் நாடல்லவா இது. ஸர்வமாயும் ஸர்வஞ்ஞனும், ஸர்வசக்தனும், ஸர்வவியாபியுமான கடவுளே ஸ்வயம் பிரகாசமுள்ளவர், அவரால் மற்றவைகளெல்லாம் பிரகாசப்படுகின்றன. சகல வித்தைகளையும், கலைகளையும் ஸரஸ்வதிதேவியாக பாவித்துகொண்டாடப்படும்நாடாயிற்றே நம்நாடு. இத்தகைய நாட்டில் நாடெங்கும் கல்வி பரவி தாண்டவமாடவில்லையென்றால் வேறெங்குதான் முடியும். அறியாமை என்னும் பேரிருள் பலவிடங்களில் பேய்போல் சூழ்ந்து கொண்டிருக்கிறது போலும். இப்பேயின் ஆட்டத்தில் சிக்குண்ட பலர் நம்நாட்டில் வறுமை, சிறுமை, பிணிபோன்ற பல துன்பங்களுக்காளாகி தங்களது உண்மையான ரூபத்தையும் சக்தியையும் அறிய இயலாதவர்களாய் வருந்துகிறார்கள். கல்விச் சுடர் எங்கும் ஒளிவீசும்படி செய்வித்தால் அறியாமை என்னும் பேரிருள்தான் இருந்தவிடம் தெரியாது மறைந்துவிடும். பெரிய கண்டம் போல் விரிவாயுள்ள நம்நாடெங்கும் கல்விச்சுடர் கொழுந்து விட்டெரியும்படி செய்விப்பதெப்படியென்றுஎல்லோரும் மலைக்கிறார்கள். நம்நாட்டின் கல்வியின் நோக்கம் உண்மையான நிலையாயுள்ள தத்துவங்களை அறிந்து அதன்படி நடப்பதேயாகும். வெறும் எழுத்தறிவு ஏட்டுச்சுரைக்காயாகும். கல்வியில் அதிகத் தேற்சியடைந்து நாகரீகத்திலும் பொருளாதார நிலையிலும் உன்னத பதவியடைந்த மேல் நாடுகளிலும் கூட இத்தகைய உயர்நோக்கத்தை கல்வியின் லக்ஷ்யமாக கருதாததால்தான் மனித சமூகத்திற்கே அவாகளின் மூலம் அடியோடு நாசமேற்படும்போல் தோன்றுகிறது. இதற்கு முக்கிய காரணம் அவர்கள் முதன்மையாக தாங்களெல்லோரும் ஓரேவித மானிடவர்கத்தைச் சேர்ந்தவர்களென்பதை அடியோடு மறந்துவிட்டதேயாகும். எந்த நாட்டிலோ, பிரதேசத்திலோ, வசிப்பினும் மானிடர்களின் உடலமைப்பு, ஒன்றே. எல்லோருக்கும் பசி தாகம், அதிக சீதோஷ்ணத்தினால் பாதை, சுசும், துக்கமென்பது ஒன்றே யாகும். விஷயப்பற்று, ஆசை, கோபம், முதலிய பல உணர்ச்சிகளும் மானிடர்களுக்கெல்லாம் பொதுவானதே. மானிடர்கள் உலகம் முழுவதும் இவ்வளவு ஒற்றிருப்பதிலிருந்து இவர்களை ஓரே சகோதர, சகோதரிபாவமுள்ள மானிட குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்வதேதான் சரியெனத் தோன்றுகிறது. இத்தகைய ஓரே குடும்பத்தியவர்கள்போன்ற மானிடர் பரஸ்பர அன்பும், ஒத்துமையும், ஆதரவும் கூடியவர்களாகயிருந்து வருவதில் ஒன்றும் ஆச்சிரியப்பட இடமில்லை. ஆனால் அப்படி அன்பும் ஆதரவுமில்லாமல் பரஸ்பர

வெறுப்பும், அசுசையும், பொருமையும் கொண்டவர்களாகக் காணப்படுகிருர்களே வென்பதுதான் ஆச்சரியப்படத் தக்கது. ஆகவே நமது மனபக்குவமடைய வேண்டிய முக்கிய நோக்கத்தை விட்டு, ஏராளமாய் எந்த வழியிலாவது நமது பொருளைப் பெருக்குவது பிறர் தேசத்தை தம்வசமாக்கும் பேராசை, தனது அதிகாரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற அகங்காரம் இதுபோன்ற துராசையெல்லாம் பரஸ்பரம் நாசத்தையே விளைக்கும். இதற்கு அடிப்படையான காரணம் விரிவான மனேபாவமுள்ள மானிடன் தான் முதலில் மானிடனென்பதை மறந்தது தானுகும். அத்துடன் வரவர தான்குறுகிய மனேநோக்கமும் புத்தியுமுள்ளவனுக உலகத்திய மானிடரில் தன்னை ஒருவனுக கருதாமல் தன்னை ஒரு குறுகிய தனிப்பட்ட சிறு பிரிவான தேசத்தவன் அல்லது நாட்டினன் என்று நினைப்பதே யாகும். இத்தகைய குறுகிய புத்தியினுல் அகண்ட இயல்புள்ள மனிதன் எவ்வளவு தன் நாட்டின் நன்மையை மட்டிலுமே கருதுகிருனே அவ்வளவு மட்டில் அவனுல் அடுத்துள்ள நாடுகளுக்குத் தீங்கு விளைவிக்கப்படுகிறது. இத்தகைய எண்ணமே மனதில் குடிகொண்ட மனிதன் தன் நாட்டு ராஜீய காரியங்களுக்காக பிறர் நன்மை துன்பங்களைச் சிறிதும் யோசிக்காது எதுவும் செய்யத் துணிந்து விடுகிருன். தன் நாட்டில் வழங்கி வரும் ராஜீய முறைகளும் வழக்கங்களும் அபிப்ராயங்களும்தான் சரியானவை, மற்றவை அவற்றிற் கொத்து வராவிடில் அவற்றை போர்செய்தாவது தங்கள்வழிக்குத் திருப்புவது முதல் கடமையென்று, தவருன அபிப்ராயத்திற்கு அடிமையாகிருன். இதனுல் தான் சமீப காலத்தில் பல நாடுகளுக்குள் இரண்டு பெரும் மகாயுத்தங்கள் ஏற்பட்டது. இத்தகைய மகாயுத்தங்களில் ஏற்படும்பொருள் நஷ்டம் ஜனச்சேதத்திற்களவில்லை. நாடுகளெல்லாமே சீரழிந்து நாகரீகம் குன்றி கேவலம் கீழ் விலங்குகளைப் போலவே மானிடரும் நடந்து கொள்ளும்படியாகிறது. இவ்வித இரண்டாவது மகாயுத்தம் முடிந்துஅதிக காலமாகவில்லை. இதனுல் ஏற்பட்ட பெரும் துன்பம், கஷ்டம், சிரமம் இவற்றினின்றும் இன்னும் நாடுகள் தலைக்கிளம்ப முடியவில்லை. யுத்தத்தில் மடிந்தவர்களை புதைத்த விடங்களில் புல் இன்னும் அதிகமாய் விளையவில்லை. அவர்கள் மாண்டவிடங்களில் சிதறிய இரத்தம் இன்னமும் காயவில்லையென்றுகூட சொல்லலாம். அதற்குள் மறுபடியும் அதிகாரவர்கத்தினர்களாகிய மேல் நாட்டார்கள் செய்யும் யுத்தத் தயாரிப்பும் அணுகுண்டு, ஹைட்ரஜன்பாம்பு இவைபோன்றவற்றின் போட்டியும் உலகத்தை மறுபடியும் நடுநடுங்கச் செய்கிறது. இத்தகைய யுத்த மேற்படாமல் தடுக்க போர் ஒப்பந்தங்களும், அதிகார நாடுகள் கட்சி கட்டுவதும் சரியான முறையாகாது. சரியான மனேநிலையில்லாமல் செய்யும் ஒப்பந்தமும் சமரசப்பேச்சும் வீண் தான். முரண்படும் நாட்டினர்களுக்குள் ஐக்கிய தேசத்தியத் தலைவர்களின்மத்தியஸ்தம் செய்வது, நடுநியாயமுரைப்பது, பாதுகாப்பு கூட்டம் கூடுவது இத்தகைய முயற்சிகளில் காலம் வீணுய் கழிந்து விடுகிறது. இவை யொன்றும் பலிக்காது, நிலையாய் நிற்காது. இப்படி வீணுகும் காலத்தில் உலகத்திலுள்ள எல்லா நாட்டார்களும் தங்களுக்கிருக்கும் குறுகியமனேபாவத்தையும் மறந்து,மறுபடியும் அகண்டமான மனேபாவமும் புத்தியுமேற்பட வேண்டிய சிறந்த முறைகளைக் கையாள்வதே சிறந்த வழியாகும்.

கல்விதான் மனித சமூகத்தை வேண்டிய மாதிரி அமைக்கும் சக்தியுள்ளது. கல்வியின் வேலை நூல்களை கற்பிப்பது, விஞ்ஞான விஷயங்களை போதிப்பது மட்டுமல்ல. நாட்டி

னர்களுக்கு ஊழியம் செய்து சம்பாதித்து ஜீவனம் செய்வது மட்டில் கல்வியின் வேலையாகாது? நாட்டினர்களின் மனதை விசாலப்படுத்தி மனித சமூகத்தினர் பரஸ்பரம் அன்புடனும் ஆதரவுடனும் ஒத்துழைக்கும்படி ஒருமைப்படுத்தி சமூகத்தைச் சீர்படுத்துவதுதான் அதன் முக்கிய நோக்கமாகும். இப்படி செய்வதினால்தான் எல்லா நாட்டினர்களுடைய மனோநிலை பக்குவமடைந்து சீரானபடி அமையும். இதற்குத் தக்க கல்வித்திட்டங்களையும் முறைகளையும் எல்லா நாட்டினர்களுக்கும் பொதுவான அடிப்படையானக் கல்வியென்று நிர்ணயம்செய்து உலகமெங்கும் ஒரேவித மனப்பான்மை மானிடர்களுக்குள் ஏற்படும்படி செய்ய வேண்டியது ஐக்கிய தேசத்தலைவர்களின் முதற்கடமையாகுப். இதை கவனியாமல் வேறு சுகாதாரம் பொருளாதாரம் போன்ற பல விஷயங்களில் மட்டில் பூமண்டலத்திற்கு பொதுவான ஏற்பாடுகள் செய்வதில் ஒருவிதபலனு மேற்படாதென்பது உறுதி. ஆகவே கொஞ்சமும் தாமதமின்றி ஐக்கிய நாட்டுத்தலைவர்கள் ஏற்ற கல்வியின் மூலம் உலகத்திய மானிட சமூகத்தை ஒருமனப்படும்படியான அடிப்படைக் கல்வி திட்டத்தை உலகெங்கும் எல்லா நாடுகளிலுமேற்படுத்தவேண்டும்.

எவ்விஷயங்களை எடுத்தாலும் ஒவ்வொன்றிற்கு முள்ள வித்தியாசத்தை கவனிப்பதே போதனா முறையில் அதிகமாய் கையாளப்பட்டு வருகிறது. அப்படியில்லாமல் முதன் முதலில் எல்லாவற்றிற்கும் எவ்வளவு ஒற்றுமையிருப்பதென்கிற பழக்கமே சிறுவயது முதல் பயிற்சி செய்யப்பட வேண்டும். வித்தியாசங்களிருந்தபோதிலும்கூட எப்படி பல ஒற்றுமை பல விஷயங்களுக்கும் பொதுவாக விருக்கின்றனவென்னும் பழக்கம் அடிமுதலேற்பட வேண்டும். பொருள்களை ஒன்றுபடுத்தும் கண்ணோட்டமே எப்பொழுது கையாடிவரப்படவேண்டும். ஒருமைப்பட்டுள்ளவைகளிலும் சிற்சில வித்தியாசங்களிருப்பது சகஜம் இவ்வித்தியாசங்களினால் அடிப்படையான ஒற்றுமை ஒரு சிறிதுங்கூட பாதிக்கப்படாதென்னும் உண்மை நன்கு மனதில் பதியும்படியான பழக்கமேற்படவேண்டும்.

மேல் நாடுகளில்மட்டுமல்ல, நம் நாட்டிலும்கூட இப்பேதபுத்தி அதிக தீங்கு விளைத்து வருகிறது. ஜாதிபேதம், மதபேதம், ப்ரதேசங்களின் பேதம், பாஷாபேதம், பழக்கவழக்கங்களின் பேதம் இப்படி எண்ணிற்ற பேதபுத்தியை வைத்துக்கொண்டு ஜனங்கள் அதற்காளாகி பிரிவு பட்டுப்போகிறார்கள் மேற்கூறிய பேதங்களெல்லாம் சிற்சில சௌகர்யங்களுக்காக ஏற்பட்டனவை, இவை அவ்வளவு சாரமானவையல்ல. இவ்வளவு சிறுபேதங்களுக்கிடையிலும் நமக்குப்பொதுவாயுள்ள அடிப்படையான ஒற்றுமைகள் உயர்ந்தோங்கி நிற்கின்றன. அவற்றை கவனியாது ஒன்றுக்கும் உதவாத சிறுபேதங்களினால் பேதபுத்தியையடைவது நமது அற்பபுத்தியையும் புத்தியில்லாமையையும்தான் எடுத்துக்காட்டும். சிலர் ஏதேனும் பேதம் கிடைக்காதாவென்று வலை போட்டுத்தேடி பேத புத்தியை ஏற்படுத்த முயலுவது மிகவும் தாழ்ந்த குறுகிய நேரில்லாத புத்தியுள்ளவர்களுக்கு அடையாளமாகும்.

அமெரிக்கப் பிரயாண நினைவுக் குறிப்புகள்

"சுந்தரம்"

சென்ற மஹா யுத்தத்தை அடுத்த சில வருஷங்களில் நமது நாட்டின் பல மாகாணங்களிலிருந்தும் நூற்றுக் கணக்கான மாணவர்களும் உத்தியோகஸ்தர்களும் விஞ்ஞானம், வைத்தியம் இன்னும் இது போன்ற பல துறைகளில் விசேஷ ஆராய்ச்சி செய்தல், இயந்திர சாலைகளில் பயிற்சி பெறுதல், உலகப் பிரசித்திபெற்றகல்லூரிகளில்விசேஷக் கல்வி பயிலுதல் முதலிய காரணங்களுக்காக அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்களில் பெரும் பாலானோர் அமெரிக்கா, சென்றார்கள் என்பது மிகையாகாது. ஐரோப்பா, இங்கிலாந்து முதலிய தேசங்களில் கடந்த மஹாயுத்தத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கும் வாழ்க்கைச் சீரழிவு, உணவு, இட நெருக்கடி இவைகளை ஆராய்ந்தால் அமெரிக்கா சென்றவர்கள் பல விஷயங்களில் அதிருஷ்டசாலிகள் என்றே சொல்ல வேண்டும். யுத்தத்தில் அமெரிக்காவும் பெரும் பங்கு எடுத்திருந்த போதிலும் நேருக்கு நேர் அமெரிக்காவின் துறைமுகங்களும், நகரங்களும், நகர வாசிகளும் பாதிக்கப்படவில்லை. உலகத்தின் மற்றைய நாடுகளுக்கு பொக்கிஷதாரியைப்' போலவும் உணவுக்கிடங்கைப்போலவும்தற்போது அமெரிக்கா ஒரு உச்சஸ்தானத்தில் இருப்பது எல்லோரும் அறிந்ததே.

முதன் முதலாக அமெரிக்காவில் காலெடுத்து வைக்கும் அயல் நாட்டினர் எந்த தேசத்தவராயிருந்தாலும் வெகு விரைவிலே காண்பது அமெரிக்கர்களின் சினேக பாவமே. முக்கியமாக இந்தியன் என்று அறிந்த மாத்திரத்திலேயே சற்று அதிக ஆவலுடனே அவர்களாகவே பேச்சில் இறங்கி இந்திய அரசியல் நிலைமையைப் பற்றி விசாரிப்பதுவும், அமெரிக்காவும் அமெரிக்கர்கள் எப்படி விரும்பப்படுகிறார்கள் என்று கேட்பதும் மிகவும் சர்வசாதாரணமாகத் தோன்றும். இந்தியா சுதந்திர நிலை அடைந்த பின்னர் இந்தியர்களின் கௌரவமும், அவர்களிடம் காட்டப்படும் அபிமானமும் பன்மடங்கு உறுதியாக்கப் பட்டிருக்கின்றது. அதற்கு ஏற்றாற் போல் கல்லூரிகளிலும் இன்னும் பல்வேறு ஸ்தாபனங்களிலும் விசேஷப்பயிற்சி பெறும் இந்திய மாணவ மாணவிகள் தாங்கள் கைக் கொண்ட பொறுப்புக்களில் சிறந்த முறையில் ஊக்கமும், புத்திக் கூர்மையும் காட்டி பேரும் புகழும் அடைந்து வருகிறார்கள். சிறிய நகரமாக இருந்தாலும் பெரிய நகரமாக இருந்தாலும் அவ்வவ்விடங்களில் கல்விஸ்தாபனங்களிலும், மற்றைய சங்கங்களிலும் இந்தியர்களை பேச அழைத்து அவர்களிடமிருந்து இந்தியாவைப் பற்றியும் அவர்கள் அமெரிக்காவைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்

பிராயங்களைப் பற்றியும் அறிய விரும்புவார்கள், அப்படிப் பட்ட கூட்டங்களில் ஏதோ பேச்சைக் கேட்டு அசிரத்தையுடன் அவரவர்கள் கலைந்து போகாமல் மிகவும் ஒழுங்கான முறையில், பேச்சின் முடிவில் கேள்விகள் மூலம் தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்துக்கொள்வது என்பது மிகவும் சகஜம். மற்றும் இக் கூட்டங்களுக்கு ஆண்கள்மாத்திரமல்லாமல் பெண்களும் அதிகமாக வந்திருந்து பங்கெடுத்துக் கொள்வது விசேஷிக்கத்தக்கதே.

நமது நாட்டின் நாகரீகத்திற்கும், ஏனைய நாடுகளின் நாகரீகத்திற்கும் அதிகமானவேறுபாடுகள்வெளிப்படையாகக் காணப்படினும் பொதுவில் மனிதத் தன்மையைப் பற்றி ஆராயுங்கால் அதிக முரண்பாடுகள் காணப்படமாட்டா என்று உறுதியாகக் கூறலாம். நடையுடை பாவனைகளிலும், உணவு, கலாசார முறைகளிலும் அமெரிக்கர்களுக்கும் நமக்கு மிடையே வேற்றுமைகள் காணப்படலாம். இதனுல் வெளித் தோற்றத்திற்கு அவர்கள் அதிக நாகரீக மடைந்தவர்கள், நாம் சற்று பிற்போக்கானவர்கள் என்று சிலர் நினைக்கலாம். ஆயினும் உண்மைக்கு இது முற்றிலும் மாருனது என்பது அவர்களுடன் சற்று நெருக்கிப் பழகினல் நன்கு விளங்கும். வயது வித்தியாசமின்றி ஆண்களுக்கு சரிசமனுகப் பெண்கள் சகஜமாக நெருங்கிப் பழகுவார்கள். உபாத்திமைத் தொழில், சிற்றுண்டிசாலைகளிலும் ஹோட்டல்களிலும் பரிமாறும் தொழில், எல்லா வித ஆபீஸ்களிலும் Secretary என்று வழங்கப்பட்டு டைப் அடிப்பது சுருக்கெழுத்து எழுதுவது போன்ற தொழில் செய்பவர்கள் அனைவரும் பெண்களே. இவ்விதத் தொழில்களிலும் இன்னும் இவைபோன்ற அனேக தொழில்களிலும் பெண்கள் ஈடுபட்ட போதிலும், அவர்களும் சிரத்தையுடன் வேலை நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் இயன்றவரை பொது விஷயங்களில் ஊக்கம் காட்டுவார்கள். எடுத்துக் கொண்ட பொறுப்பைச் சிரமேற் கொண்டு

மிகவும் உண்மையாகவும், சிரத்தையுடனும் கடிகாரத்திற்கே அடிமைபோல் காலை முதல் மாலை வரை நியமனப்படி தங்கள் வேலைகளில் ஈடுபடுவதும் அமெரிக்கர்கள் அத்தேச முன்னேற்றத்திற்குச் செய்யும் சிறந்த பணிவிடையாகும். எந்தத் தொழில் செய்பவராக இருந்தாலும் ஒரு மணி நேரத்திற்கு ஒரு டாலருக்குக் குறையாமல் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. விசேஷத்தொழில்கள் செய்பவர்கள் மணிக்கு ஐந்து டாலர்வரை கூலி பெறுகிருர்கள்.

வேலையில்லாத்திண்டாட்டம் அமெரிக்காவில் இல்லை என்று சொல்வதற்கில்லையென்றாலும் ஒவ்வொருவருக்கும் அவரவர்சக்திக்கு ஏற்றபடி எந்த தொழிலையும் செய்வதற்கு அவகாசம், நிச்சயமாக உள்ளது. பிச்சையெடுப்பது என்பது அவர்கள் தேச கௌரவத்திற்கே ஒரு இழிவாகக் கருதப்படுகிறது. குருடு, முடமாக இருந்தாலும் தெரு மூலைகளில் உட்கார்ந்து தன்னெதிரே தினசரிப் பத்திரிகைகளை அடுக்கி வைத்துக் கொண்டு விற்பனை செய்வது அல்லது பென்சில், ரப்பர் இவைகளை விற்பதோ போன்றவைகளைச் செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு பிழைக்கிறார்கள்

சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வியும், பின்னர் ஆண், பெண், வயது வித்தியாசமின்றி அவரவர்கள் சக்திக்கும் விருப்பத்திற்கும் ஏற்றபடி உயர்கல்விப் பயிற்சிக்குத் தேவையான அவகாசங்களும் அநேகம் உள்ளன. தொழில்களில் ஈடுபட்டவாறே ஒழிந்த நேரங்களில் கல்வி கற்பதற்கு சௌகரியமாக கல்விச்சாலைகளின் நேரங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தினம் சிலமணி நேரங்கள் வீதம் பலமாதங்கள் அல்லது சில வருஷங்கள் தொடர்ந்து கற்று பட்டங்கள் பெறுவதற்கு ஏற்ற வசதிகள் உள்ளன. புத்தகசாலை வசதிகள் இலவசமாகவே அனேக இடங்களில் கொடுக்கப் படுகின்றன. ஊருக்கு ஊர் பத்திரிகைகள் தினந்தோறும் மூன்று நான்கு பதிப்புகள் அச்சடிக்கப்பட்டு பொது மக்களால் சர்வ சாதாரணமாக வாங்கிப் படிக்கப்படுகின்றன.

விடுமுறை நாட்களை அமெரிக்கர் சாதாரணமாக வீட்டில் கழிப்பதே இல்லை. சினிமாக்கள், கடற்கரை அல்லது நீந்து குளங்கள், கலைக்காட்சி சாலைகள், மிருகசாலைகள் இவை போன்ற இடங்களுக்கு திரளாகச் சென்று அவைகளை அனுபவிப்பார்கள் இப்படி விடுமுறை நாட்களில் பொழுது போக்குக்காகச் செலவு செய்வதை பொதுவில் அவர்கள் லட்சியம் செய்பவர்களாகக் காணப்பட வில்லை. வாழ்க்கைக்கு அவைகளும் மிகவும் அவசியம் என்று தோன்றும் முறையில் விடுமுறை நாட்கள் கழிக்கப் படுகின்றன. இதற்கேற்றாற் போல், பிரயாணம், தங்குமிடம், கண்காட்சி, உணவு சிற்றுண்டி வசதிகள் எல்லாம் சிறந்த முறையில் அளிக்கப் படுகின்றன.

தேசீய உணர்ச்சியிலும் சுதந்திர உணர்ச்சியிலும் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள். உலகத்தின் மற்றைய நாடுகளைக் காட்டிலும் மிகவும் சிறந்த முறையிலும் திருப்தி கரமான முறையிலும் அமெரிக்க ஜனநாயகம் நடக்கிறது என்பது அவர்களின் திடமான அபிப்பிராயம். எந்தத் தொழிலில் ஈடு படுபவனாக இருந்தாலும் அவனவன் முயற்சித்து அவன் திறமையும் சிலாக்கியத்தையும் காட்டுவானேயானால் "அவன் முன்னேறுவதை எவனும் தடுக்க முடியாது, அமெரிக்காவின் ஜனாதிபதியாகக் கூட தேர்ந்தெடுக்கப் படலாம்" என்று உறுதியாக நம்புகிறார்கள். அமெரிக்காவின் தற்போதைய முன்னேற்றத்திற்கு அம்மக்களின் இத்தகைய மனப்பான்மை பெரிதும் காரணம் என்று கூறலாம்

(தொடரும்)

உபாத்தியாயர்.

(தென்னாப்பிரிக்கா டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.)

பாடசாலை ஆசிரியர்கள் செய்யவேண்டிய சில விஷயங்களை மாத்திரம் இவ்விடம் கூற விரும்புகிறேன். ஒரு வகுப்பை ஒரு ஆசிரியன் பொறுப்பேற்றவுடன் முதற்செய்ய வேண்டியது, அந்த வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையையும் பற்றிப் படிப்பதே. இந்த வேலையை ஒரு நாளிற் செய்துமுடிக்க இயலாது. படிப்படியாகவே செய்யவேண்டும் மாணவரின் தேக இயல்புகளையும் குண இயல்புகளையும் தேவைகளையும் நன்கறிந்த ஆசிரியனே தன்னுடைய தொழிலில் அனுகூலமடைவான்.

ஆதலினால், தாங்கள் கற்பிக்கும் ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் ஆசிரியர்கள் ஆராய வேண்டும். மேலைத் தேசங்களிலே இவ்வித ஆராய்ச்சிகளை எத்தனையோ ஆசிரியர்கள் நடத்திப் புஸ்தக ரூபத்தில் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றார்கள். ஏன் நாமும் இத்துறையில் ஈடுபடக்கூடாது? ஒவ்வொரு ஆசிரியரும் ஓரளவுக்குத் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பிள்ளைகளைப் பற்றி நன்கு கற்க வேண்டும். சில பிள்ளைகள் நோய்காரணமாகப் படிப்பிற் குறைவாயிருக்கக் கூடும். சிலர் படிக்க வசதியின்மையாற் போதிய வளவு தேர்ச்சி காட்டாமலிருக்கக் கூடும். சிலர் விவேக முள்ளவர்களாயிருந்தும், அஜாக்கிரதை, சோம்பல், குறும்பு முதலிய தீக்குணங்களினால் முன்னேற்றம் அடையாமலிருக்கலாம். மாணவரின் தன்மைகளைப் போதியவளவு அறிந்து கொள்ளாத ஆசிரியர்கள் அநேக மாணவர்களைத் திருத்த வழி அறியாது பயமுறுத்தியும் கண்டித்தும் தண்டித்தும், வந்தமையால் அம்மாணவர்கள் பாடசாலையை வெறுத்து, கல்வியில் நல்ல தேர்ச்சி அடையாமல் வீணர்களாய் வந்திருக்கின்றார்கள். ஆதலால் ஒவ்வொரு ஆசிரியரும் மாணவரின் தன்மைகளை உள்ள நூலாராய்ச்சியாலும் நேரனுபவத்தாலும் விசாரணையினாலும் அறிவது ஒரு முக்கிய கடமையென்று நான் நினைக்கிறேன். ஒவ்வொருவரும் தம் தம் பாடசாலைகளில் தங்களாற் செய்யக்கூடிய ஆராய்ச்சிகளை நிகழ்த்தி, அவைகளின் பலாபலன்களைத் தாங்களும், மற்றவர்களும் அறியக் கூடியதாக ஆசிரியர் கூட்டங்களில் வெளியிட்டால் எல்லோர்க்கும் பயன் கொடுக்கும். இத் தொண்டாற்றுவதற்குப் பலரும் முன்வர வேண்டும்.

தகுந்த புஸ்தகங்கள் வெளிப்படாமையால் காலமும் பணமும் வீணாகின்றன. ஆகவே பாடசாலைகளுக்கேற்ற புத்தகங்களை வெளியிடுவதிலும் அதிக முயற்சி செய்யவேண்டும் வல்லபம் படைத்த ஆசிரியர்களை இவ்விஷயத்தில் ஈடுபட ஆசிரியர்சங்கங்கள் தூண்டிவிட வேண்டும். இப்படி வெளியாகும் புத்தகங்களை எல்லாப் பாடசாலைகளும் ஆதரிக்க வேண்டும்.

ஆசிரியர்கள் காலந்தோறும் வெளியாகும் நூல்களையும் பத்திரிகைகளையும் வாசிக்க வேண்டும். ஆசிரியர் சங்கங்கள் மூலமாகப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் புத்தகங்கள் முதலியவைகளை அழைப்பித்து எல்லா ஆசிரியர்களும் வாசிக்கக் கூடிய ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். இவைகளை வாசித்துச் சிறந்தவற்றை மாணவர்களுக்கு எடுத்துக் கூறல் ஆசிரியர் கடனாகும்.

ஆசிரிய கலா சாலைகளிற் கற்றுத் தராதரப் பத்திரம் பெற்றோர் பலர், தாம் எல்லாம் அறிந்து விட்டோம் என்று எண்ணுவதனால் சற்றேனும் வளர்ச்சியை யடையாது காலஞ் செல்லத் தேர்ச்சி குன்றித் தகுதியற்றவராகின்றனர். இவர்கள் தங்கள் கலாசாலைகளிற் பெற்ற பயிற்சியை ஆதாரமாகக் கொண்டும் ஆராய்ச்சி முறையாகக் கற்றும் கலந்துரையாடியும் அறிவு விருத்திசெய்தல் மிக அவசியம்.

ஒருபாடசாலையின் முன்னேற்றத்திற்குப் பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம் வேண்டியது. வருடத்தில் ஒருதரம் பெற்றார் தினக் கொண்டாட்டம் வைத்தாற் போதாது மாதத்திலொருமுறையாவது பெற்றார் தினம்

இருக்கவேண்டும். ஆசிரியர்கள் பெற்றோர்களை நனகறிந்திருக்க வேண்டும். அவர்களுடைய தொழில் குடும்ப நிலைமை முதலிய விஷயங் களைத் தாமுணர்ந்திருத்தலும் வேண்டும். பிள்ளைகள் உபாத்தியாயரைத் தங்கள் குடும் பத்தோடு நட்புள்ளவர்களென்றுணர்ந்து அவர்களிடம் பற்றுடையவர்களாயிருப்பார் கள். அதிக நம்பிக்கையுடையவர்களாயு மிருப் பார்கள். காலத்துக்குக் காலம் பிள்ளைகளின் குறைகளைப் பெற்றோர்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களோடொத்துழைத்துக் குறை களை நிவிர்த்தி செய்யவேண்டும்.

சில விடங்களில் பெற்றோர்களினுடைத்து ழைப்பைப் பெறுவது மிகக் கஷ்டமாயிருக்கும். ஆசிரியர்கள் தங்கள் வல்லமையினால் பெற் றோரின் மனத்தைப் படிப்படியாகத் திருப்ப வேண்டும்.

உபாத்தியாயர் எப்பொழுதும் பிரதான மாகப் படிப்பிக்கும்போது முக மலர்ச்சியுடை யவராயிருத்தல் வேண்டும். கோபமே இருக்க லாகாது. அதிலும் படிப்பிக்கும்பொழுது கையில் பிரம்புடன் இருப்பதும் தண்டிப்பதும் சிறிதேனும் தகாத நடக்கை அக்கல்வி ஒரு போதும் பிள்ளைகள் மனதில் தரிக்காது. ஒரு விஷயத்தைக் கற்பித்தவுடன் மாணவனை நோக்கி 'நான் சொன்னது விளங்கினதா" என்றால், அவன் இல்லையெனில் அடிவிழு மெனப் பயந்து எல்லாம் விளங்கி விட்ட தெனக் கூறுவான். ஒருமுறை விளங்காவிட் டால் ஏன் அம்மாணவன் விளங்கவில்லை என்றுனென்ற காரணத்தை ஆராய்ந்து, அவ னுக்கு விளங்கச் செய்யக்கூடியவரே சரியான உபாத்தியாயர்.

சில ஆசிரியர்களைக் கண்டால் பிள்ளைகள் நடுங்குவார்கள். இதுகூடாது. மாணவர்களுக்குப் பாடங்களைப் போதிக்கும் காலங்களில் ஆசிரி யர்கள் பொறுமையுடையவர்களாய் முகமலர்ச் சியுடன் விஷயங்களைப் புகட்டவேண்டும். அப்போழுதுதான் பாடத்திலும் ஆசிரியர்களி டத்தும் மாணவர்கள் விருப்ப முடையவர் களாயிருப்பார்கள்.

1950-51-ம் வருடத்திய எதிர்கால பலன்.

பெரிய கொடையாளியான தனவான் ஒருவர் பண்டிட்ஜீ அவர்களின் எதிர்கால பலன் சொல்லும் திறமையின் மேல் அபார நம்பிக்கை வைத்து பெரும் பொருட்ச் சிலவில் எல்லோரும் அறியும் பொருட்டு விளம்பரப் படுத்திக்கொண்டிருக்கிறார். காரிருளில் பேரொளி என ப்ரகாசிக்கிறது பண்டிட்ஜீயின் தீர்க்க திருஷ்டியின் திறமை யென மேலும் உரைக்கிறார் அவர். சூட்சமதர்சனத்தால் உங்களுடைய எதிர்கால பலன்களை தெரிந்துக்கொள்ள விருப்பினால் உங்களுக்குப் பிரியமான ஒரு புஷ்பத்தின் பெயரையும் எழுதும் நேரத்தையும் குறித்து எங்களுக்கு ஒரு போஸ்டுகார்டில் எழுதுங்கள். நாங்கள் உடனே அதற்குப் பதிலாக உங்களுக்கு அடுத்த பனிரெண்டு மாதத்திய எதிர்கால பலன்களைத் தெரியப்படுத்துகிறோம். நீங்கள் உங்களின் பெய ரையும், விஷயத்தையும் விளக்கமாய் தயவு செய்து எழுத வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். உங்களின் வியாபார லாப நஷ்டம், செய்யும் வேலையின் ஏற்றத்தாழ்வு தேக சௌக்கிய-அசௌக்கியங்கள் அயல்நாட்டுப் பிரயாணம், சந்தோஷமான தாம்பத்ய வாழ்க்கை, மூதாதியர்களால் மறைத்துவைக்கப்பட்ட புதையல் பொக்கி ஷங்கள், போட்டி பரிசைப்பற்றிய ஹேஷ்யங்கள், இவைகளைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் விளக்கமாக எழுதி உங்களுக்கு 1-4-0 ரூ செலவில் V. P. யில் அனுப்பிவிடுவோம். தபால்செலவு தனி. நீங்கள் கார்டு எழுதின நேரத்தின் அடுத்த பனிரெண்டு மாதத்திய பலன்கள் இதில் அடங்கியிருக்கும். இத்துடன் கெட்ட க்ரகங்களை சாந்திசெய்யும் வழியும், ஏற்படும் இன்னல்களை தடுக்கக்கூடிய வழியும் விபரமாக எழுதி அனுப்புவோம். இவ்வருஷத்திய பலன் சரியாக இல்லையெனில் கொடுத்த பணம் திருப்பி அனுப்பப்படும். ஒருமுறை பரீக்ஷை செய்துப்பார்த்தால் எதிர்கால பலன் சொல்லுவதில் எங்களுக்குள்ள அபார திறமைப் புலனாகும்!

Pt. Dev Dutt Shastri Raj Jyotishi, (K. M.) Kartarpur (E.Pb.)

அப்போதும் இப்போதும்

by P. S. N

சுகமும் துக்கமும் கலந்திருப்பதே உலக வியல்பாம் இதை யுணராத மக்கள் பலருளர். இவர்கள் துக்கத்தை விலக்கிச் சுகத்தையே யடைய விரும்புகிறார்கள். ஆதலாலிவர்களது பார்வையில் வாழ்க்கையானது துக்கம் நிறைந்ததாகவே தோற்றமளிக்கிறது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்று நினைக்கும் பசுவினங்களைப்போன்றவரேயாவர் இத்தகையோர். இவர்கள் தங்களைக் காட்டிலும் அதிக சுகத்தைப்பிறரனுபவிப்பதாக நினைக்கின்றனர். இவர்களது மருண்ட பார்வையில் பிற இனத்தார், பிற நாட்டார், பிறமதத்தினர் ஆகியவர்களே சுகம் பெற்று வாழ்கின்றவர்களாகத் தோன்றுகிறார்கள். சுகத்தையே நாடி நிற்குமிவ்வகுப்பினர்த் தமது சுக மின்மைக்கும் சுகக் குறைவிற்குங் காரணம் தமது வகுப்பின், தமது நாட்டின், தமது மதத்தின் பழக்க வழக்கங்கள், ஆசார அனுஷ்டானங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் முதலானவையேஎன்று துணிந்துள்ளார்கள். இவைகளை விட்டொழித்து உய்யும்நாட்களை ஆவலோடுஎதிர்ப்பார்த்த வண்ணமிருக்கிறார்கள் இப்படிப்பட்டவர்கள் தங்களது நீண்ட காலத்து ஆராய்ச்சியின் முடிவில் கண்டெடுத்த இப்பேருண்மையைப் பிறர்க்குப் போதிப்பதிலிவர்கள் சிறிதும் தயங்குவதில்லை. உய்யும் வழி இதுவோ அதுவோ வென்று அலைந்திரும் பாமரமக்களுக்கு உற்ற துணைவர்களாக அமைந்து வழிகாட்ட இப்படிப்பட்டவர்களே விரைந்து முன் வருகிறார்கள். திருத்த முறைகளைச் சீக்கிரத்தில் மேற்கொண்டு வாழ்வதல்லால் சீர் பெறும் மார்க்கம் வேறில்லை என்று இவர்கள் சாதிக்கிறார்கள். திருத்த முறைகளை முழு மனத்துடன் பூரணமாய் ஏற்றுக் கொள்ள வேண்டுமாம். அரைகுறை திருத்தங்கள் எதிர்ப்பார்க்கப்படும் பெரும் பயன்களைப் பயவாவாம்.

கல்வித் துறையிலாயினும், சமூகத் துறையிலாயினும், அரசியற் றுறையிலாயினும் வேறு எத்துறையிலாயினும் மாறுதல்கள் ஏற்படும் வகை இரண்டாகும். ஒன்று புரட்சி மார்க்கம் (Revolution) மற்றொன்று வளர்ச்சிமார்க்கம் (evolution)

முன்னிருந்துதானா இது? நம்புவதற்கே முடியவில்லை! இது வேறு புதிய ஒன்றாய்த் தான் இருத்தல் வேண்டும் என்று தீராச்சந்தேகம் கொள்ளும் அளவில் ஒரு பெரும் மாறுதலானது மிகக் குறுகிய கால அளவில் வந்துற்றதாகில் அதைப் புரட்சி என்று குறிப்பிடுகிறோம்.

இதற்கு மாறாக, மாறவில்லையே! எங்கே மாறியிருக்கிறது! முன்னிருந்த அதுவே தானிது ஒரு வித்தியாசமுமில்லை. மாறியுள்ளதென்போர்க்குத்தான் சித்தப்பிரமையோ என்று வாதாடுமோர் அளவில் மிக மிகச் சிறிய ஒரு மாறுதலானது மிகுந்த நீண்டதான கால அளவில் சிறுகச் சிறுக படிப்படியாக வந்துற்றதாகில் அதை வளர்ச்சி முறை என்று குறிப்பிடுகிறோம். மாறுதல் ஏற்றவர்க்கும் மாறுதல் உண்டு பண்ணியவர்க்குங் கூட உணர்வில்லாத வகையில் ஏற்படக் கூடியது எதுவோ அதுவே வளாச்சி முறை என்று கருதற்பாலது.

'உலத்திலே மனத்திட்பமும் உடல் வலியும் பெற்றவரே புரட்சி மனப்பான்மையோடு இயங்குதல் கூடும். இத்தகையோர் சிலரே இருத்தல் சாத்தியமாம். பெரும்பான்மையோர் வளர்ச்சி மனப்பான்மையோடிருப்பதையே நாம் காண்கிறோம். இவர்களுடைய நிலை இரண்டும் கெட்ட நிலையாகும். வேத காலம், உப நிடத காலம் என்று சொல்லத் தகுந்த பழைய காலத்தில் மகரிஷிகளும் ஆத்தும ஞானிகளும் காட்டியுள்ள வாழ்க்கை முறைகள் வகுத்துத் தந்துள்ள ஏற்பாடுகள்(The Hindu way of life) ஆகிய இவை எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்திலும்க்ஷேமத்தையேசெய்ய

கூடியவைகளல்லவா? அவைகளை நாம் ஏன் மாற்றியமைக்க வேண்டும்? அவைகளைத் திறம்பட அனுஷ்டிக்காத காரணத்தினாற்றான் நாமிப்போது கெட்டு அலைகின்றோம் என்று நமக்கு எடுத்துப் போதிக்க சிலர் தலைப்படுகின்றனர். எத்திசையில் செல்வது, எம்மார்க்கத்தைக் கடைப்பிடிப்பது, எவர்காட்டிய வழியை யனுஷ்டிப்பது என்று ஆய்ந்தோய்ந்து சீர் தூக்கிப் பார்த்து எண்ணித்துணிந்து யுக்தமான கருமத்தை மேற்கொள்ளுவோம் வாருங்கள். போயடைவோம் நாம் ஒருக்கால் விட்டுவந்த உன்னத நிலையை என்று சிலர் நம்மைக் கூவியழைக்கின்றனர். அப்படிச் செய்வதில் கஷ்டங்களிருப்பினும் அதற்காக நாம் கொண்ட கருமத்தைக் கைவிடல் ஆண்மையாகுமோ என்று கேட்கிறார்கள். வலிந்து கஷ்டப் பட்டு மேற் கொள்ளும் காரியங்கள் இயற்கை வளர்ச்சி முறையின் பாற்படாதே என்று இதற்கோர் எதிர்வாதம் செய்வோரும் உண்டு. பழைய பழக்கங்களை மீண்டும் அடைவதற்கானாலும் திடமான சித்தம் வேண்டும். உறுதியான கொள்கை லேண்டும். இவை இல்லாதவர்கள் பொறுப்பேற்கும் ஆண்மையற்றவர்களாய் செத்தவன் பளுவு சுமந்தவன் தலைமேலே என்ற வண்ணமாய்த் தாங்கள் வாளா விருந்து சுமையெல்லாம் சீர்திருத்தத் தலைவர்களே தாங்கும்படி பார்த்திருப்பார்கள். பெரு வெள்ளத்தில் மிதந்து செல்லும் தூசிகள் போலவும் பெருங்காற்றில் தள்ளுண்டு திரியும் பஞ்சுத் துளி போலவும் வாழ்வதிலே திருப்தியும் மனவமைதியும் பெற்றுத் திகழ்வார் சாமானிய மக்கள. ஆள்சாயும் பக்கம் மரம்சாயும் என்ற முதுமொழிக்கிணங்க இவர்கள் சமயத்திற்குத் தக்கவாறு நடந்து கொள்வதில் சிறிதும் தயக்கமில்லாதவர்கள். சீர்திருத்தத்திற்காகப் பாடு படுவோர் Refornists என்றும் பழைய வழக்க வழக்கங்களைச் செவ்வனே அனுஷ்டிப்போம் என்போர் Reactionaries என்றும் எந்தப் பக்கத்திலும் சேராமல் இருப்போர் the middle group என்றும் குறிக்கப் பட்டு வருகிறார்கள்.

புதிய நிலைமைகளும் புதிய சந்தர்ப்பங்களும் புதிய காரியங்களை அத்தியாவசியமானவையாகச் செய்கின்றன. புதிய நிலைமைகள் தோன்றியதெப்படி? புது சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதெதனால் என்று ஆராயுங்கால் புதிய காரியங்களை நாம் ஏற்றமையாற்றான் என்று விளங்குகிறது. ஆகவே காரியமும் காரணமும் ஒரு வட்டத்தில் அமைந்து பரஸ்பரம் காரணமாகவும் பரஸ்பரம் விளைவாகவும் காணப்படுகின்றன.

பாமரமக்களைத் தங்கள் வழியே நடத்திச் செல்ல விரும்பும் சீர்திருத்தக்காரர்களுக்கு பண்டைக் கால அபிமானிகளின் பிரசாரம் ஒரு பெருந்தடங்கலாக வந்திருக்கிறது. இந்தத் தடையை ஒழிப்பதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் பழைய நிலைமையை யடைந்தால் க்ஷேமம் ஏற்படும் போற்றானிருக்கிறது என்று மக்கள் எண்ணாதவாறு இந்த எண்ணம் மூட பக்தியினாலும் குருட்டு நம்பிக்கையாலும் உண்டானதென்றும் அந்தக் காலத்திலும் திருடு, கபடம் சூது, கொலை, களவு எல்லாம் இருந்தன வென்றும் சொல்ல வேண்டும். இவைகளொன்றும் அக் காலத்தில் இல்லை என்று ஏதாவது நூல்களில் எழுதப்பட்டிருந்தாலுங் கூட அவைகளை உண்மை யென்று கொள்ள அவசியமே இல்லை என்று எடுத்துக்காட்ட வேண்டும். பாவலர்களது கற்பனையிலும் நாவலர்களது பகற் கனவிலுமேதான் அந்த உயர் நிலைகள் சித்திரிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டல் அவசியம் ஆகையால் இதையேதான் சீர்திருத்தக்காரர்கள் செய்ய முன் வருகிறார்கள். நீதிஸ்தலங்கள் இருந்தன. வழக்குகள் நீதிமன்றங்களுக்குக் கொண்டு போகப்பட்டன என்று சொல்லுகிறார்கள். ஆம் வாஸ்தவம்தான் சண்டைகள் இம்போதும் இருக்கின்றன. அப்போதும் இருந்தன. இரண்டு காலச் சண்டைகளிலும் வித்தியாசங்கள் ஏதாகிலுமுண்டா வென்று ஆராய்ந்து அறிவது அவசியம். இதைக் கீழே கவனிப்போம்.

ஓரே ஒரு கிராமத்தில் ராமன் என்றொரு பெரியவர் இருந்தார். இவர் ஒரு சமயம் கிருஷ்ணனுடைய பிதுரார்ஜிதமான ஒரு காலிமனையை விலைக்கு வாங்கினார். அந்த மனையில் 'வைரம்' ஏறிய நல்லதோர் வேப்பமரம் ஒன்று இருந்தது ஒரு சிறு வீடு கட்டத் தேவையான மரம் அந்த

வேப்பமரத்தை வெட்டி அறுத்தாலே கிடைத்து விடும். மனையை விற்ற காலத்தில் விக்கிரயப் பத்திரமும் எழுதப் பட்டது. ஆனால் இந்த காலத்தில் வழக்கமாக எழுதப் படுவது போல் ஒரு விஷயம் எழுதப்பட வில்லை. மனையிலுள்ள மரங்கள் அகப்படக் கூடிய பொருள்கள் யாவற்றையும் கைப்பற்றி பாரம்பரியமாய் அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்று எழுதப் பட வில்லை. சில மாதங்கள் கழிந்ததும் ராமன் என்ற பெரியார் தான்கிரயத்துக்கு வாங்கிய மனையிலுள்ள மரத்தை வெட்டி எடுத்தார். கட்டிடத்திற்கு அஸ்திவாரம் போட நிலத்தை ஒரு கெஜ ஆழம் தோண்டியபோது கடப்பரையின் நுனியில் ஏதோ தடைப்பட்டது. அதைத் தோண்டி எடுத்தபோது ஒரு பித்தளைச்சொம்பாகஇருந்தது அதனுள் நிரம்ப தங்கநாணயங்கள் காணப்பட்டன. மறு நாட்காலையில் இரண்டு வண்டிகளில் மரத்தை ஏற்றிக் கொண்டு புதையலில் அகப்பட்ட தங்க நாணயங்களையும் எடுத்துக் கொண்டு கிருஷ்ணன் வீட்டை யடைந்தார். தெருத் திண்ணையில் உட்கார்ந்தார். ராமன் வருகையை யறிந்த கிருஷ்ணன் வெளியில் வந்து ராமனை உபசார வார்த்தைகளால் வரவேற்று வந்த காரியம் என்ன வென்று கேட்டார். அதற்கு ராமன் விஷயத்தைச் சொல்லி தான் கொண்டு வந்திருக்கும் பொருள்களை ஏற்று அருள வேண்டுமென்று பிரார்த்தித்தார். கிரயம் செய்த க்ஷணமே அதற்கும் தனக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்றும் அதில் அகப்படும் சகலமான பொருள்களும் ராமனையே சேர வேண்டு மென்றும் சொல்லிவிட்டார். வெகு நேரமாக இருவரும் வாக்கு வாதம் செய்தார்கள். ஒரு முடிவுக்கும் வர வில்லை. நான் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார் ராமன். நான் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார் கிருஷ்ணன். இந்த விவாதத்திற்கு முடிவில்லாமையைக் கண்டு ராமன் வழக்கை நீதிபதியினிடம் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று துணிந்து அடுத்தநாளே பிராது செய்து விட்டார். குறித்த நாளில் நீதிபதி வழக்கை விசாரிக்கத் தொடங்கினார். பொருள்களை ராமன் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய நீதிபதியினாலும் முடிய வில்லை. ஆகையினால் அவ்வூரில் இருந்த கோதண்டராமஸ்வாமி கோயிலுக்குக் கொடுத்து விடும்படி உத்திர விட்டார்.

இதைப் போன்ற ஒரு நிலையில் இந்தக் காலத்திலும் விற்றவருக்கும் வாங்கியவருக்கு மிடையில் வழக்கும் சச்சரவும் வளர்ந்திருக்கும். வாஸ்தவம்தான். ஆனால் வழக்கு எப்படிப் பட்டதாயிருக்கும் என்று வாசகர்களே எளிதில் ஊகித்துக் கொள்ள முடியும். ஆகவே பழைய காலமும் இக்காலத்தைப் போலத்தான். சண்டை முதலான பலவும் அக்காலத்திலும் இருந்தன. சண்டையில் இருந்த வித்தியாசத்தை மாத்திரம் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

சூரியன்

1. உனதருள் அன்றேல் உலகினிலே
   உயிர்கள் எல்லாம் வாழ்ந்திடுமோ.

2. உன்னால் பயிர்கள் செடிகள் எல்லாம்
   உவகை கொண்டு நின்றிடுமே.

3. காலையில் செவ்வொளி பரப்பிடுவாய்
   கடுகியே விரைவாய் வந்திடுவாய்.

4. மாலையில் மேற்கே மறையுமுன்
   மறக்கமுடியுமோ உன் வடிவை.

260. லிங்கச்செட்டி தெருவு,
சென்னை 1. வயது 12.

T. R. சுவாமிநாதன்.

ஆரம்பசங்கீதம்

"K. N. Rajammal."

சந்திரனை முடியில் தரித்த ஜடாமகுட தாரியான சங்கரன் ஸாமகானம் செய்த ராவணனை, கைலாஸகிரியைதூக்க முயன்ற குற்றத்தை மன்னித்து, அந்தகானத்தால் சந்தோஷமடைந்து, அவனுக்கு வேண்டிய வரங்களை தந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. மும்மூர்த்திகளும் கானத்திற்குக் கட்டுப்பட்டவர்களே.

கானரூபிணியாகியவள் தேவி ஸரஸ்வதி. அவ்வளை மனதில் ஸ்தோத்தரித்து பாடத்துவக்குவது மிகவும் ச்ரேயஸ் கரமானது.

ரஞ்ஜகமான சப்தத்திற்கு ராகமெனப்படும். சப்தத்தின் மூலம் ஸ்வரத்தை சிருஷ்டித்திருக்கிறார்கள். மாணவர்களுக்கு முதல் "ஸ்வராவளியை" போதிக்கவேண்டும். ஆரம்ப பாடம் அதுதான். ஸ்வரங்களின் பெயர்களைச் சொல்லித்தந்துவிட்டு பாட ஆரம்பிப்பது நலம். ஸ்வரங்கள் ஏழு. அவை கீழ்வருமாறு.

ஸ — ஷட்ஜமம்
ரி — ரிஷபம்
க — காந்தாரம்
ம — மத்யமம்
ப — பஞ்சமம்
த — தெய்வதம்
நி — நிஷாதம்.

ஸ்வரங்களின் பெயர்களைக் கொண்டு பாடமுடியாதாகையால் அதன் ஸங்கேத அக்ஷரங்கள்தான் ஸ்வரமெனப்படும்.

சங்கீதம் பாட, அமைத்துள்ளது மூன்று ஸ்தாயிகள். மந்திரஸ்தாயி—மத்தியஸ்தாயி-தாரஸ்தாயி என மூன்று வகையாக வகுத்திருக்கிறது. மாயாமாளவ கௌளராகம் தான் முதல் ஆரம்பிக்கும் ஸ்வராவளிக்கு பெரியோர்கள் அமைத்திருக்கின்றனர். மேலே செல்லும் வரிசை ஸ்வரத்திற்கு "ஆரோஹண"மென்றும் கீழே இறங்கும் வரிசைஸ்வரத்திற்கு அவரோஹணமென்றும் பெயர். அவை கீழ்வருமாறு.

ஸரிகமபதநி—ஆரோஹணம்,
ஸநிதபமகரி-அவரோஹணம்.

பாடவேண்டிய முறை மத்யஸ்தாயி ஷட்ஜமம் முதல் தாரஸ்தாயி பஞ்சமம் வரையில் ஆரோஹணத்திலும், மந்திரஸ்தாயி பஞ்சமம் வரையில் அவரோஹணத்திலும் பாடலாம்.

மாணவர்களுக்கு ஸ்வரத்துடன் தாளமும் கற்பிக்கப்படவேண்டும். தாளத்திற்கும் பெயர்கள்உண்டு. அதற்கு அக்ஷரகாலம், பிரிவினைகள், அவைகளின் பெயர்கள் கீழ்வருமாறு.

ஒரு தட்டு தட்டி எண்ணுதலுக்கு "லகு" எனவும். ஒரு தட்டு தட்டி வீசுதலுக்கு "த்ருத"மெனவும். தட்டுமாத்திரம் தட்டினால் "அனுத்ருத" மெனவும் பெயர். இவையெல்லாம் சேர்ந்து தான் அக்ஷரங்கள் கணக்கிடப்படும்.

தாளங்களின் பெயர்களுக்கேற்ப அக்ஷரங்கள் உண்டு.

ஆரம்ப ஸ்வராவளிக்கு ஆதி தாளம் நியமிக்கப் பட்டிருக்கிறது. இந்த தாளத்திற்கு அக்ஷரங்கள் 8. ஸ்வரங்கள் 7 ஆனால், 8 அக்ஷரங்கள் எப்படி பிரயோகிக்க வேண்டுமெனில்

மந்திர,——மத்திய,——தார,
—— ஸரிகமபதநி——ஸா
ஆரோஹணம் (8)

தாரஸ்தாயி (மத்திய)
(ஸா) நிதபமகரி-ஸா அரோஹணம். (8) அக்ஷ
(ஸ)

மத்ய ஷட்ஜம முதல் துடங்கி தார ஷட்ஜமம் வரை 8 அக்ஷரங்கள் ஆகின்றன. அப்படியே அவரோஹணத்திலும் 8 அக்ஷரங்கள் ஆகின்றன. தாளத்திற்கும் மூன்று காலம் உண்டு. அவைகளுக்கும் பெயர்கள் உண்டு. ஆனால் இதர பாடங்களுடன் சங்கீதமும் பாடமாய் அப்யசிக்கும் மாணவர்களுக்கு, முதல் காலம் இரண்டாம் காலம் மூன்றும் காலம், என்று சொல்லி தந்தால் போதும். அதன் வகை எப்படி எனில் முதல் காலத்திற்கு ஒரு தட்டுக்கு 1 அக்ஷரமும். இரண்டாம் காலத்திற்கு ஒரு தட்டுக்கு 2 அக்ஷரங்களும்

மூன்றும் காலத்திற்கு ஒரு தட்டுக்கு 4 அக்ஷரங்களும் ஆகும். காலம் மேலே செல்லச் செல்ல அக்ஷரங்கள் பெருக்கபடும்.

பாடவேண்டுவது மூன்று காலம்தான். அதற்கு மேல் பாடவேண்டியது வித்துவான்கள். ஆரம்பகலைக்கு மூன்று காலம் போதுமானது.

ஆரம்ப கல்விக்கு போதிக்க வேண்டியவை ஸ்தாயிகள்-3-அதன் பெயர்கள். ஸ்வரஸ்கள் 7-அதன்பெயர்கள். தாளத்தின் பெயர் அக்ஷரகாலம் எவ்வளவு என்றுப் போதிக்கப் படவேண்டும்.

ஸ்வராவளி 9 ஸ்வரங்களும் மூன்று காலத்தில் தாளத்தை சொல்லிதந்து அப்யசிக்க வேண்டும்.

சிறுமனதுகளுக்கு சங்கிதம் சுலபமாய் இதர பாடங்களுடன் அப்யசிக்க வசதியாக இருக்குமென்று இத்துடன் நிறுத்தலாம். மேற்படி முறைகளை போதித்து ஸ்வராவளியை பாட ஆரம்பித்தால் மனதில், பதிந்திருக்கும். சொன்னால் மாத்திரம் போதாது. ஆசிரியர் ஸ்வராவளி 9 வரிசைகளையும் பாடி ஒவ்வொன்றையும் விளக்கிக் காட்டவேண்டும்.

ஆசிரியர் ஓர் ச்ருதியை நியமித்து அத்துடன் சேர்ந்து பாடப் பழக்க வேண்டும் அப்படி மாணவர்களைப் பழக்காவிடில் அபஸ்வரம் தாராளமாய் வந்துவிடும். இயற்கையாகவே ஞானமும் சாரீரமும் அமைந்த மாணவர்கள் ச்ருதியில் சேர்ந்து பாடினல் வெகு ரஞ்ஜகமாக இருக்கும். நல்ல சாரீரமிருந்து சங்கித ஞான மில்லாத மாணவர்களை, ச்ருதியுடன் சேர்ந்து பாடச் செய்தால் நாளடைவில் தன்னல் ஞானமும் ஏற்படும்.

இதுவரையில் நான் ஆரம்ப சங்கீத போதனைக்குகந்த சுலபமான வழியைச் சொல்லி வந்தேன்.

சங்கீதசாஸ்திரத்தை விளக்கிகூறவரவில்லை. எங்கும் வியாபித்திருக்கும் சாஸ்தரரீதியான சங்கீதம் முழங்கும் இக்காளில் சுலபமான வழியாய் உதவுமெனக் கருதி என் அனுபோகத்தில் கண்டவைகளை எழுதியுள்ளேன் மாணவர்களுக்கு சங்கீத கல்வி விருத்தியாக எது முக்கியமெனவும் சாஸ்த்ரத்தை யொட்டினப்போல் கற்பிக்க வேண்டுவது எவை எனவும் விவரித்துள்ளேன்.

நன்மார்கம்

பல்லவி

பேதபுத்தி நீக்கிநின்றால் பேரின்பம் தானடைவாய்
வாதங்களும் பலவேசெய்து வாட்டமிக அடைவதென்னே. (பேத)

அநுபல்லவி

நீதங்களும் மறந்துநின்றாய்—நீனிலம் காப்பேனென்றாய்
காதகங்கள் பலவும் கற்றாய்—கண்ணிருப்போன் செய்கையற்றாய்.
(பேத)

சரணம்

மண்ணதிலே பிறந்தமக்கள் மனமொன்று பட்டிடாமல்
எண்ணமதில் பகைநினைத்து—எதிரிகளைமிகவே கொண்டார்
திண்ணமுடன் சொல்லிட்டேனே—திருத்தியுடனுலகில்வாழ
உண்மையுடன் அன்பதுவும்—உத்தம நன்மார்க்கம் கண்டாய். (பேத)
(ஸ்ரீ வத்ஸன்)

கடமை

ஆம்; மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமைதான் கல்வியைக் கற்றறிந்து-உலகில் வாழவேண்டியது கடமைதான் கல்வி அறிவில்லாதவர்களுக்கு கல்வியைப் போதிப்பதும்—ஒரு கடமைதான்-கற்றபடி நடத்தலும்-கற்றவர்களுக்கு ஓர் கடமைதான்-கற்றவர் ஒவ்வொருவர்களும் கல்லாதவர்களுக்கு கல்வியை போதிப்பது ஒரு பெரும் கடமையாகும். கல்லாதவர்களே—நம் நாட்டில் இல்லை-என்று நாம் என்றும் இறுமாந்திருக்க—என்றும் இன்பம் கொள்ள எங்கும் இருள்நீங்கச் செய்வது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

கல்வியை போதிப்பவர்களையும், கல்வியை போதிக்கும்படிசெய்கின்றவர்களையும் ஆதரிக்க வேண்டியது, எல்லாவற்றிலும் சிறந்த கடமையாகும். கல்வியை நாட்டில் பரவும்ப்படி செய்வது மிக்க கடினமான காரியம். படிக்கும் கல்வியும் பயன்படும்படி செய்யுதல் அதைவிடக் கடினமானது. உயிர் உடல் பொருள் அனைத்தும் கல்விக்காக அர்ப்பணம் செய்து இரவு பகலாய் உழைக்கும் அன்பர்களுக்கு நாம் ஆதரவளிப்பது மிக்க அவசியமும், கடமையுமாகும் நம்முடைய ஆதரவும், அன்பும், அவர்களுக்கு பக்கபலமாக—இருந்து—தென்புடன் உழைக்கச் செய்யும். நாட்டில் கல்லாதவர்களே இல்லாதிருக்கப் பாடுபடும் அவர்களின் பணிபயன் அடையும்படி செய்தல் வேண்டும். கற்றவர்களையும் கல்லாதவர்களையும்—கல்விக்காகப் பாடுபடுகின்றவர்களை ஆதரிக்கும்படி செய்ய வேண்டும்.

நம்மாலே தனிப்பட்ட முறையில் நம் நாட்டின் கல்வியை வளரச் செய்ய முடியாவிட்டாலும் கல்வியின் வளர்ச்சிக்காக உழைப்பவர்களுக்கு நாமளிக்கும் ஆதரவின். மூல்லியமாக நமக்கும் கல்வி வளர்ச்சியில் ஒருபங்கு கிடைத்து விடுகிறது. எங்கும் அறி ஒளி சுடர் விட்டு பிரகாசிக்க நம்முடைய ஆதரவு தூண்டுகோலாகி விடுகிறது-கற்றவர்கள் வெகுவாய் உண்டாகி, கண் திறக்க ஆரம்பித்து நாட்டின் கஷ்டங்கள் நகர ஆரம்பித்து விடுகிறது. அற்ப குணங்களும்-அசட்டுக் காரியங்களும், அஞ்ஞானமும் ஒழிந்துபோய்-அறிஒளி வீச, அச்சமின்றி—அனைவரும் அவனிவாழ—அற்புதமான வழி உண்டாகிறது.

அன்பர்களே--கல்வியை கற்றுக் கொள்ளுங்கள். கற்றபடி உண்மை வழியில் நில்லுங்கள். கல்வியை—கல்லாதவர்களுக்கு கற்பியுங்கள்—கல்வியை கற்பித்து நாட்டின் மக்களை கல்வி அறிவுள்ளவராக செய்யும் தொண்டை கொண்டவர்களை மனதார ஆதரியுங்கள்-அது உங்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

கடமையை மறப்பதோ அல்லது மறைப்பதோ மனிதத் தன்மைக்கு புறம்பானது அல்லவா.

கல்வியை காசினியில் கார்ப்பதுவும் நம்கடமை—தமிழ்

செல்வியை செகத்தினில் ஆர்ப்பதுவும் அறிவுடமை

வெல்வினை ஒழித்திடாமல் ஏர்ப்பதுமுன்மடமை—என்றும்

இல்வினை இகத்திலென்ப இருள்களை யழித்திடுவாய்.

(E. S. R.)

பாரத நாட்டின் பண்பாடும் : : : : ஸம்ஸ்கிருதத்தின் தேவையும்

திருநாங்கூர் P.B.K. ஸ்ரீநிவாஸாசாரியார், டீசர்,
51. நாராயணமுதலித்தெரு, மதருஸ் 1.

பாரதநாடு (இந்தியா) இந்நாடு தெற்கே கன்னியா குமரிமுனை யிலிருந்து வடக்கே காஷ்மீர் வரையி லும் கிழக்கே பர்மா எல்லையிலிருந்து, மேற்கே பலுசிஸ்தானம் வரையிலும் பரந்திருக்கிறது. இது விந்தியமலையை நடுவாகக் கொண்டு அதன் வடபாகத் தில் அகன்றதாயும் தென்பாகத்தில் வரவரக் குறுகியதாயும் அமைந்திருக் கிறது. இந்தேசமானது (15-8-1947) அன்று ஸ்வதந்த்ர நாடாயிற்று. அதா வது இங்கிருந்து மேற்கே சுமார் 6000 மைலுக்கப்பாலுள்ள ஆங்கி லேயர்களின் நெடுநாளைய ஆட்சியா னது, அன்றையதினம் இந்நாட்டு மக்க ளான நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் தலைவர்களின் கையில் மாறியது. இந்நாட்டு மக்களாய் நம் ஸஹோதரர் களான சில முஸ்லீம் பிரமுகர்களின் விருப்பப்படி மேற்கே சிறிது பாகமும் கிழக்கே சிறிது பாகமும் பாகிஸ்தா னெனும் பெயருடன் ஸ்வதந்திர நாடா யிற்று. மிச்ச பாகமான நம் பாரத நாட்டின் (இந்தியா) பண்புக்கேற்ற வகையில் அரசியலை நம் பிரதிநிதிகள் கூடி திட்டமிட்டு (26—1—1950) அன்று அதை அமுலுக்கு கொண்டு வந்திருக் கிறார்கள். அத்திட்டம் 395 ஷராக்க ளுடன் 8 அனுபந்தத்துடன் கூடியதா யிருக்கிறது. அதில் 8-வது அனுபந்தத் தில் இந்நாட்டின் பாஷைகள் 14 அங்கீ கரிக்கப்பட்டிருக்கின்றன.

அவையாவன:—1. அஸ்ஸாமிய மொழி. 2. வங்காளி. 3. குஜராத்தி. 4. ஹிந்தி. 5. கன்னடம். 6. காஷ்மீரி. 7. மலையாளம். 8. மராத்தி. 9. ஒரியா. 10. பஞ்சாபி. 11. ஸம்ஸ்கிருதம். 12. தமிழ். 13. தெலுங்கு. 14. உருது. இதில் ஸம்ஸ்கிருதம் 11-வதாக எடுக்கப் பட்டிருக்கிறது. 1-வதாக எடுக்கப்பட வேண்டிய இது 11-வதாக எடுக்கப்பட் டிருக்கிறது. இதுவே வித்யாசம் ஸம்ஸ் கிருதமொழியறிந்தவர்கள் கீழ்ச் சொன்ன எல்லைக்குட்பட்ட இந்நாட் டின் முழுமையிலும் ஆங்காங்கு இருக் கிறார்கள். இது மறுக்க முடியாத உண்மை.

பாரதநாட்டின் பண்பாடு

பரதனெனும் முனிவன் இங்கு, பல ரஸங்கள் செறிந்து ஒரே சமயம் பல திறப்பட்டுவருக்கும் இன்பம் பயக்கு வதான நாட்டியக் கலையை ஆத்மீகத் துடன் இணைத்து அதன் வளர்ச்சியை ஆத்மீக வாழ்க்கைக்குப் பயன்படுத்தி வாழ்ந்தமையால் இந்நாடு பாரதமெனப் பெயர் பெற்றதென்பர். வேறு சிலர் துஷ்யந்தன், சகுந்தலை, எனுமிருவர் களின் காதற்பயனாகப் பிறந்த பரதன், எனும் அரசகுமாரன் இந்நாட்டை நன்றாக ஆண்டமையின் பாரதமெனப் பெயர் பெற்றதென்பர். காதற்கடி மணம் என்பது தமிழரின் சிறந்த ஒரு பண்பாடு. மஹாபாரதமெனும் இதி ஹாஸநூலானது அமைப்பில் பெரிய தாயும், விஷயங்களின் பெருமையால்

பளுவுடையதாயிருக்கிறதோ, அவ்விதமே இந்நாடு பெரிதும் பரந்ததாய் பல பாஷை பல நாகரீகம் முதலிய பெற்றுள்ள மக்கள் வாழ்கின்றமையின் உலகத்தால் பெருமைப்படக்கூடியதாயிருப்பதால் பாரதமெனப் பெயர்பெற்றது என்று நம் அபிப்ராயம். உலக மாத்திரமா? தேவர்களும் இந்நாட்டைப் புகழ்ந்தும், இந்நாட்டில் பிறந்து அரோக்ய திடகாத்திரத்துடனிருக்கும் மக்களைப் புகழ்ந்தும், தாங்களும் இங்கு வந்து பிறக்க விரும்புகிறார்கள் என்பதை நாம் புராணங்களில் பலவிடங்களிலும் காணலாம். இவைகளாலெல்லாம் நாம் இந்நாட்டின் சிறந்த பண்பாட்டை ஒருவாறு அறியலாம். சிறந்த அரசாட்சியின் கீழ் அச்சமற்று ஸ்வதந்திரமாய் தங்கள் திறமைக்கேற்றபடி தங்கள் கலைகளை வளர்த்து, அவைகளை வெறும் ஹிகவாழ்க்கைக்கு மாத்திரம் பயன்படுத்தாமல் ஸ்திரமான ஆத்மீக வாழ்க்கையுடன் இணைத்து பலபாஷைகளுக்கும் பல பழக்க வழக்கங்களுக்கும் பல மதங்களுக்கும் சரிசமமான மதிப்பு கொடுத்து ஒற்றுமையுடன் வாழ்தலாகிறபண்பாடேயாம் அது. நம்நாட்டின் ஒவ்வொரு மாகாண அளவுக்கேயுள்ள சில மேற்கத்திய ஸ்வதந்தர நாடுகள் நாகரீக வளர்ச்சி பெறுவதர்க்குமுன்னமேயே நம்நாடு நாகரீகத்தின் முன்னணியில் விளங்கிற்று. இது உலக சரித்ர ஆசிரியர் எல்லோரும் ஒப்பமுடிந்த விஷயம்.

நாகரீகமென்பது காலம், தேசம், வர்த்தமான (சூழ்நிலை) இவைகளுக்கேற்ப மாறுபடும் தன்மையது. பல திறப்பட்ட ஸமூஹத்தினரான இந்நாட்டு மக்களான நம் நாகரீகத்தில் அடிப்படை ஒற்றுமை ஒன்று நன்றாக விளங்குகிறது. இது எந்த கொள்கையின் மேல் உருவாயிற்று? அதை விளங்கும் ஒரே பாஷை எது? அதன் முன்னைய நிலை என்ன? தற்போதைய நிலை என்ன. இனி வருங்காலம் எப்படியிருக்கும்—எப்படியிருக்கவேணும் என்பதைச் சிறிது விளக்குவோம்.

ஸம்ஸ்கிருத மொழி

இம்மொழியே நம் சிறந்த பண்பாட்டை விளக்கும் கலங்கரை விளக்காகும். இந்த பாஷையை 1 வேத காலம். 2. உபநிஷத்கர்லம். 3. இதிஹாஸபுராண காலம். 4. ஸாஹித்திய காலம் எனும் நான்கு காலங்களாக வகுத்து அவைகளில் இதன் வளர்ச்சியை ஆராய்கிறார்கள். மொழியாராய்ச்சியாளரின் இவ்வழி சிலருக்குப் பிடிக்கலாம். சிலருக்குப் பிடிக்காமலுமிருக்கலாம். இங்கு எழுதுவது நமது தீர்மானமன்று. வேத காலத்தில் ஆத்மீக தத்வ விஷயங்கள் அதிகம் பரவவில்லை. அக்காலமக்கள், பிள்ளை குட்டி, கால்நடைகள், விவசாயம் இதற்கான மழை, இவைகளையே விரும்பி இதற்கான கர்மம்—வினைகளை வகுத்து அவைகளில் இந்திரன், அக்னி, வாயு, சூரியன், சந்திரன் இவர்களையே புகழ்ந்து பயன்பெற்றார்கள். மேற்கிலிருந்து வந்த வீரதீரச் செயல் புரியும் சில மக்களின் ஸஹவாஸத்தால் அவர்கள் கொண்டுவந்த ஆத்மீக தத்வ விஷயங்களை உபநிஷத் காலத்தில் மக்கள் மிகவும் கையாண்டார்கள். ஆகவேதான் உபநிஷத்துக்களில் சில பிரம்ஹவித்யைகளை க்ஷத்திரியர்களே உபதேசித்ததாகக் காணப்படுகிறது. இவற்றால் வேதகாலத்தில் தத்வத்தைச் சொல்லும் சொற்கள் குறைவாயுள்ள இம்மொழி உபனிஷத் காலத்தில் நிறைந்த சொற்களுடையதாயிற்று என்று நாம் அறியலாம். இவ்விதமே புராணஸாஹித்திய காலங்களில் சொல்லணி பொருளணி நிறைந்த பல நூல்கள் பல துறைகளிலும் இம்மொழி

யில் பரவிற்று என்று ஆராய்ச்சியின் முடிவு. பாஷையானது அதைக் கையாளும் மக்களின் மனோநிலைமை அளவு இவைகளுக்கேற்ப வளருவது ஒன்றாகையால் இந்நாடு முழுவதும் மக்களின் மனதில் உரைந்து இம்மொழி வளர்ச்சி பெற்றது முன்னொரு சமயம். அதன் பயனே இன்னமும் இந்நாட்டின் ஒற்றுமையெனும் சிறந்த பண்பாடு, தந்திரமான பல ஆட்சிச் சூழலில் சிக்கி மாயவில்லை. அவ்விதமாக வளர்ச்சி இம்மொழிக்கு ஸ்வதந்திர நாட்டில்பின்னொரு சமயம் வந்தே தீரும். அப்பொழுதே இந்நாட்டின் சிறந்த பண்பாடு ஒப்புயர்வற்றதாய் விளங்கும். ஆரம்பித்த இடத்துக்கு வந்து சேருவது உலகின் இயல்பு. ஆகவே தற்சமயம் இப்பாஷைக்கு அங்கிலையையடைய முயற்சி செய்வதே நாட்டின் தேவையாகும். "உழைப்பே பயன்" எனும் கீதையின் அடிப்படையை அங்கீகரித்து நாம் இப்பாஷைக்குச் சிறிது உழைப்போமாக. ஸம்ஸ்கிருத வளர்ச்சியாலேயே பாரதநாட்டின் பண்பாடு வளம்பெறும் என்று திண்ணமாகச் சொல்லலாம். இது வளர்ச்சி பெற வகைமுறையை வேறொரு சமயம் இக்கல்வி மூலமாய் எழுதுவோமாக. அரசியல் அனுபந்தத்தில் ஸம்ஸ்கிருதம் தமிழ் இம்மொழிகளின் ஒற்றுமையை விளக்குகிறது. ஆகவே தமிழ் நாட்டினரான நமக்கு வடமொழி தென்மொழியைப் பற்றின விரோத மனப்பான்மை யகலுமாக. ஜெய் ஹிந்த்.

ஆரம்பப் பாடசாலைகள், குத்தாலம்.

தென்னிந்திய முதல் முதியோர் கல்வி வார விழா.

(3—2—50 முதல் 7—2—50 வரையில்)

ஷை விழாவை ஒட்டி 7—2—50 செவ்வாய்க்கிழமை மாலை $3\frac{1}{2}$ மணிக்கு K. S. V. பாடசாலை, சோளீஸ்வரன் பாடசாலை, போர்டு பாடசாலை, T. E. L. C. பாடசாலை, ஸரஸ்வதி வித்யாலயம் மாணவ மாணவிகள் ஊர்வலமாய் வந்து ராஜாஜி பூங்காவில் ஸ்ரீ. K. V. சுப்பா ரெட்டியார் B. A. அவர்கள் தலைமையில் கூடி ஒரு பொதுக்கூட்டம் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

ஷை பாடசாலைகள் மாணவ மாணவிகளால் கும்மி, கோலாட்டம், டான்ஸ், பேச்சு, சம்பாஷணை முதியோர் கல்வியைப் பற்றிய பல பாடல்கள் நடந்தேறின.

அதன்பின் உயர்தரப்பள்ளி ஆசிரியர் ஸ்ரீ. S. குஞ்சிதபாதம் பிள்ளை, போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீ. கிருஷ்ணசாமி அய்யர், உயர்தரப்பள்ளி மாணவன் ஸ்ரீ பட்டு, உயர்தரப் பள்ளி ஆசிரியர் ஸ்ரீ சந்தானமுத்து முதலியவர்கள் முதியோர் கல்வியைப்பற்றி அரிய சொற்பொழிவுகளாற்றினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் K. S. V. பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ. V. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு தேசிய கீதத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

V. Balasubramaniam,
Secretary.
E. T. A.
Kuttalam.

KUTTALAM.
9-2-'50.

மாணவர்கள் எழுதும் - - கட்டுரையை மதிப்பிடுவதெப்படி

By

(கே. ராமச்சந்திரராவ், உயர்தர ஆரம்பபள்ளி, நாங்கூர்).

கட்டுரை அல்லது வியாசம் எழுதல் (Written composition) தாய்மொழி போதனையில் ஓர் முக்கிய அம்சம் பெற்றுள்ளது என்பது மிகையாகாது. ஓர் எழுத்தாளர் தமது கட்டுரையினால் வாசகர்களின் ஹிருதயத்தை கவர்ந்துவிடுகிறார் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். உதாரணமாக சமீபத்தில் வெளியான ‘வாழ்க்கை’ என்னும் பேசும் படத்தில் கதாநாயகி மோகனாவின் ஹிருதயத்தை அசோக்குமார் என்று புனைப்பெயர்கொண்ட கட்டுரையாளரான கதாநாயகன் எவ்வாறு கொள்ளைகொண்டான் என்று நினைத்துப்பார்த்தால் தெரிய வரும். மேலும் ஓர் நாட்டின் முன்னேற்றத்திற்கோ அல்லது அரசியல் சம்மந்தமாகவோ அல்லது இலக்கிய அபிவிருத்திக்காகவோ எழுதப்படும் கட்டுரைகள் எவ்வாறு பயன்படுகின்றன என்று ஆராய்ந்து பார்த்தால் அவைகளின் பெருமை நன்கு புலப்படும். Vicar of wake field-ஐ ஸர். தி. முத்துசாமி ஐயர் அவர்கள் சுமார் ஐம்பத்தோருதடவைக்கு மேல் தாம் படித்ததாக அவரது குறிப்புப் புத்தகத்தில் எழுதிவைத்திருப்பதாக அவரது சரித்திரம் கூறுகிறது. தற்கால எழுத்தாளரான எஸ். வி. வி, கல்கி, தமிலன், பிச்சமூர்த்தி முதலானவர்கள் எழுதும் கட்டுரைகளை கீழே வைக்காமல் நாம் அன்றாடம் வாசித்து வருவதைச் சிந்தித்து பார்க்கவும். ஆகவே கட்டுரைஎழுதுவதோ அல்லது வாசிப்பதோ ஓர் மிக முக்கியமான விஷயம் என்று புலப்படுகிறது.

இனி சிறுவர்கள் கட்டுரை எழுதவேண்டியதன் அவசியமென்ன என்று ஆராய்வோம். சிறுவர்கள் தாம்படித்த விஷயத்தையோ அல்லது அவர்கள் உள்ளத்தில் எழும் கருத்துக்களையோ பிறர் தெரிந்துக்கொள்ளுமாறு ஆரம்பத்திலிருந்தே எழுதிப் பழகிக்கொள்ள கட்டுரை அல்லது வியாசம் எழுதுதல் ஒரு வழிகாட்டியாகும். அவர்கள் பரிக்ஷையில் எழுதித்தேறுவதற்கு மாத்திரம் கட்டுரை எழுதிப் பழக்கிக்கொள்ளவேண்டும் என்பதல்ல. தமது பிற்காலத்தில் சொற்பொழிவு நிகழ்த்தவும், பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்யவும் கட்டுரைகள் பயன்படும்.

சிறுவர்களுக்கு கட்டுரை எழுத போதிப்பதெங்ஙனம்.

எந்த விஷயத்தைப்பற்றி எழுதவேண்டுமோ அதைப்பற்றிய விஷயங்களை முதலில் ஒருதரம் சிந்தித்துப் பார்த்துப் பிறகு அதைக்கோர்வையாகச் சொல்லிப்பார்த்து அதன் பிறகே எழுதப் பழக்கவேண்டும் இதற்கு முதலாவதாக ஆசிரியர் என்ன செய்யவேண்டும். சில ஆசிரியர்கள் வாய்மொழிக் கட்டுரைக்கே பிரதான்யம் அளிப்பதில்லை. இது தவறு. வாய்மொழிக் கட்டுரைக்கும், எழுத்துக் கட்டுரைக்கும் சில மாறுபாடுகள் உண்டு. உதாரணமாக நாம் சாதாரணமாக தினசரி பேசும் பாஷைக்கும், எழுதும் நடைக்கும் அதிக வித்தியாசங்கள் இருக்கின்றன. பேச்சு நடைக்கு அதிகக் கட்டுப்பாடு இல்லாமல் இருக்கும். சுயமாக சந்தர்ப்பத்திற்கேற்றபடி பாஷை இயல்பாகவே சுரக்கும்; சிறுஇலக்கணப் பிழையுடனும் இருக்கும்; ஆனால்

ஒருவனுடைய உள்ளத்தில் இருந்து அவ்வப்பொழுது எழுதும் உள்ளக் கிளர்ச்சிகளை அயலார் செவ்வனே உணருமாறு குரலின் ஏற்றத் தாழ்வு; முகக்குறி, செய்கை இவைகளுக்கு உரை நடையில் இடம் இருக்கிறது. வாய்மொழிக்கட்டுரையில் ஜீவன், ஆவேசம் இவைகளுக்கு உச்ச ஸ்தானம் உண்டாகிறது. இவைகளுக்கு எழுத்து நடையில் அவ்வளவு ஸ்தானம் இல்லை. ஏனெனில் எழுத்து நடையில் ஒழுங்கு, கிரமம், இலக்கண வரம்பு, இவைகள் அதிகம் தேவை. இதற்கு 'Speaking maketh a ready man; and writing maketh an exact man" என்பதே சான்றாகும்.

திருத்தமும் தெளிவுமுள்ள பாஷையின் நடைதான் ஓர் கட்டுரைக்குப் பிரதானம்.

கட்டுரை எழுதுவதற்கு விஷயம் எப்படிப் பிரதானமானதோ அதைப்போலவே திருத்தமும் தெளிவுமுள்ள பாஷையின் நடையும் பிரதானமானது. இலகுவான வார்த்தைகளை உபயோகித்து சிறுவாக்கியங்களாக எழுதுவதே எப்பொழுதும் சாலச்சிறந்தது. ஆனால் அதற்காக சொல்லணி, மேற்கோள்கள், மரபுத்தொடர் இவைகளை அறவே உபயோகிக்கக்கூடாது என்பதில்லை. எப்படி எழுதினாலும் சரி பாஷையின் நடை இனிமையுள்ளதாய் இருக்கவேண்டும் என்பதுதான் பிரதான நோக்கமாய் இருக்கவேண்டும். இவ்விஷயத்தைத்தான் ஆசிரியர்கள் நன்றாய் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும்.

மாணவர்கள் எழுதும் கட்டுரையானது பிறருடைய பாஷையின் நடையைப் பின்பற்றியதாயிருந்த போதிலும் அவரவர்களுக்கு இயற்கையாய் வரும் ஒருதனி பாஷையில் எழுதப்பட்டிருக்கிறதா என்று ஆசிரியர்கள் கவனிக்கவேண்டும்.

மாணவர்களின் கட்டுரைக்கு மார்க்குகள் கொடுப்பது எவ்வாறு?

ஒரு மாணவன் எழுதிய கட்டுரையை எடுத்துக்கொண்டு அதை மிகவும் நேர்த்தியாக எழுதிய மாணவனுடைய கட்டுரையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சுமாராக எழுதினவனுடைய பாஷையின் நடையானது நன்றாய் எழுதினவனுடைய நடையைவிட எந்தெந்த அம்சங்களில் நன்றாய் இருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்படி ஒன்றும் இல்லாவிட்டால் இன்னொருவனுடைய கட்டுரையைக் காட்டிலும் எப்படி இருக்கிறதென்று பார்க்க வேண்டும். இன்றேல் இன்னொருவனுடைய கட்டுரையுடன் ஒத்திட்டு பார்க்க வேண்டும். இப்படி ஒத்திட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட ஒருவேளை நன்றாய் இருகிறதோ என்னவோ என்ற சந்தேகம் எழலாம். அப்போது ஒன்றும் நிச்சியமாய் மதிப்பிட முடியாமல் இருக்கலாம். அந்த சமயத்தில் இன்னொரு கட்டுரையுடன் ஒத்திட்டுப் பார்க்க வேண்டும். இப்போது கொஞ்சம் நன்றாய் இருக்கிறது என்றும் ஆனால் அவ்வளவு நன்றாய் இல்லை என்றும் நினைக்க நேரிடும். பிறகு இன்னொரு கட்டுரையுடன் ஒத்திட்டுப் பார்த்து அது எதைவிட மேலானது என்று தீர்மானித்து அதற்குத் தகுந்த மார்க்குகள் அளிக்கவேண்டும். மாணவர்களின் கட்டுரைகளைத்திருத்தி அவைகள் எவ்வாறுள்ளனஎன்று மதிப்பிட மேலே சொன்ன முறையை ஆசிரியர்கள் கையாண்டால் மிகவும் மட்டமாய் எழுதினவனுடைய கட்டுரைகூட மிகவும் நன்றாய் அமைந்துள்ளது என்று மதிப்பிடக்கூடும். இவ்விதம் சிரமப்பட்டு மதிப்பிட்டால் தான் மாணவர்கள் கட்டுரை எழுதி அபிவிருத்தி அடைவார்கள். மேலும் ஆசிரியர் தாம் ஒரு பத்திரிகையின் ஆசிரியர் என்றுநினைத்துக் கொண்டு மாணவர்களின் கட்டுரையை எழுதி மதிப்பிடலாகாது. ஏனெனில் பெரும்பான்மையான பத்திரிகைகளின் ஆசிரியர்கள் அநேகம் இளம் எழுத்தாளர்களின் கட்டுரைகளைத் திருப்பிஅனுப்புவதே இதற்குச்சான்று. இளம் எழுத்தாளர்களின் விஷயதானம், நடை முதலி

யன யெயர்போன எழுத்தாளர்களின் விஷய தானத்தைவிட எந்த அம்சங்களில் சிறந்து இருக்கிறது இல்லை என்பதெல்லாம் அவர்களுக்கு முக்கியமல்ல. கட்டுரை எழுதி அனுப்பியவர் வியாபகஸ்தரா, பழைய எழுத்தாளரா என்ற இவைகளைதான் கவனிக்கின்றனர். இந்த விதமான முறையோ, அல்லது வேறு எந்த சலுகையோ மாணவர்கள் எழுதும் கட்டுரைகளுக்கு ஆசிரியர்கள் அளிக்காமல் மேலே சொன்ன முறையை அனுசரிக்க வேண்டும்.

மேலும் ஆசிரியர்கள் தாம்கொடுக்கும் மார்க்குகள் கட்டுரை முழுமைக்கும் அல்ல வென்றும் கட்டுரையில் மாணவர்கள் கையாளும் பாஷையின் நடைக்குத்தான் என்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இம்முறையை ஆசிரியர்கள் கையாண்டார்களானால் (தமது மாணவர்கள் கட்டுரை எழுதுவதைப்பற்றி) பின் கண்ட விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

பிறர் உதவியின்றி நெட்டுருப் பண்ணாமல் மாணவர்கள் தாமே எழுதி இருக்கின்றனர்; ஏற்கெனவே ஒருதரம் நடத்தப்பட்டு அதன் பிறகு எழுதப்பட்டதல்ல என்றவைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

மாணவர்களின் கட்டுரையைத் திருத்தும்போது கவனிகப்படவேண்டிய அம்சங்கள்.

1. பிழைகள் எவ்வளவு இருக்கின்றன என்று ஒரேயடியாய் எண்ண வேண்டாம். (2) கோர்வையாய் எழுதப்பட்டிருக்கிறதா என்றுமட்டும் கவனிக்கவும். (3) முழுவாக்கியங்களாக (sentence sense) அமைந்திருக்கின்றனவா என்று கவனிக்கவும். காலம் (Sequence of tense) பால், எண் இவைகள் பொருத்தமாய் இருக்கின்றனவா என்று கவனிக்கவும். (4) உண்மையாகத் தெரிந்த வார்த்தைகளை சரியானபடி ஏற்ற இடத்தில் உபயோகப்படுத்தி எழுதப்பட்டிருக்கிறதா என்று கவனிக்கவும். (5) கையெழுத்தின் அழகு, ஒழுங்குக் குறைவானவேலை இவைகளை அதிகமாய் பொருள்படுத்த வேண்டாம். பாஷையின் நடையை பிரதானமாய்க் கவனிக்கவும்.

மேலேகண்ட சோதனைகளை எப்போது செய்யலாம்.

இவ்வித சோதனைகளை அடிக்கடி உபயோகித்துப் பார்த்தல் கூடாது. பிள்ளைகளின் இயற்கையான பாஷை நடையானது நாளாவட்டத்தில் வர வர எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பதை அறியும் சமயத்தில் உபயோகப்படுத்த வேண்டும். உதாரணமாக வருஷ ஆரம்பத்தில் எவ்வாறு இருந்தது. வருஷக்கடைசியில் எவ்வாறு இருந்தது என்று பார்த்தால் போதுமானது. மேலே கண்ட சோதனைகளைச் செய்து பார்ப்பதினால் ஓர் ஆசிரியருக்கு உண்டாகும் நன்மைகள் பின் கண்டவைகளாகும்:—

(1) பிள்ளைகளின் பாஷையின் நடை எத்தன்மையானது என்று ஆராய முடிகிறது (2) எந்தக்கட்டுரை நல்லது; எந்தக்கட்டுரை நல்லதல்லவென்று நியாயமாய் மதிப்பிடமுடிகிறது (3) ஒரே வகுப்பு அல்லது வெவ்வேறு பள்ளிக்கூடங்களில் அதே வகுப்பில் படிக்கும் பிள்ளைகளின் கட்டுரையில் அவர்கள் கையாளும் பாஷையின் நடையின் எல்லை என்னவாயிருக்கும் என்று தெரிந்துகொள்ள முடிகிறது. பல்வேறு ஆசிரியர்கள் ஒரே விதமான கட்டுரைக்கு கொடுக்கும் மார்க்குகள் ஒத்திருப்பதில்லை என்பது தெரிகிறது.

ஆகவே இவ்விதமான சோதனைகளால் வெவ்வேறு பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவர்களின் கட்டுரைகளை பல்வேறு ஆசிரியர்கள் எவ்வாறு மதிப்பிடுகின்றனர் என்று ஆராய முடிகிறது. இன்னும் ஒவ்வொரு ஆசிரியரும்

தனித்தனியாக எவ்வாறு (தமது மாணவர் எழுதும் கட்டுரையை) மதிப்பிடுகின்றனர் என்று தெரிந்து கொள்ளலாம். ஒரு ஆசிரியரைப் போல் இன்னொரு ஆசிரியர் மிகவும் நேர்மையாகவோ அல்லது சாவதானமாகவோ ஓர் கட்டுரையை ஏதோ சில நிமிஷங்கள் வரைதான் திருத்தி நியாயமாய் மார்க்குகள் அளிப்பார் என்றும் எப்போதும் அதேமாரி இருப்பார் என்றும் எதிர்பார்க்க முடியாது. மேலும் எல்லாப் பிள்ளைகளின் கட்டுரைகளையும் அவ்வளவு நேர்மையாய் மதிப்பிடுவார் என்றும் எதிர்பார்க்க முடியாது.

எவ்விதமான கட்டுரைகளை எழுதத் தேர்ந்தெடுப்பது?

அந்தந்த வகுப்புகளுக்குத் தகுந்தவாறு எந்தெந்தவிஷயங்களைப்பற்றி கட்டுரைகள் எழுதப்படவேண்டும் என்று ஒரு ஜாப்தா தயாரித்துக் கொள்ளவேண்டும். அம்மாதிரி தேர்ந்தெடுக்கப் பட்டவை ஒரு வருஷத்திற்கு எவ்வளவு எழுதப்படவேண்டும் என்று வரையறுக்கப் பட்டிருக்கவேண்டும். கட்டுரைகள் முக்கியமாக பாடங்களை ஒட்டியதாக இருக்க வேண்டும். அல்லது தற்கால சம்பவங்களை ஒட்டியதாக இருக்கலாம். சாதாரணமாக ஒவ்வொரு கட்டுரையும் 100 அல்லது 200 வார்த்தைகள் வரை இருக்கலாம்.

கட்டுரைகளின் வகைகள்.

1. கதை எழுதல் (நீதிக்கதை, ஹாஸ்யக் கதை, கட்டுக்கதை முதலியன)

2. குறிப்புகளைத் தயாரித்து அவைகளை விரித்து எழுதல்.

3. வர்ணனைக்கட்டுரை (காட்சி, பொருள், தோற்றம், குணகுணம், பண்டிகை, சந்தை, இயற்கைத் தோற்றம், திருவிழா, ரயில் விபத்து, வெள்ளச்சேதம், சுதந்திரதினவிழா, பரிசளிப்பு விழா).

வரலாற்றுக்கதை, சிந்தனைக் கதை, விவாதக்கதை, முதலியன. சமூகக் கடிதங்கள், வியாபாரம் விண்ணப்பம், பொதுநலக் கடிதம், குடும்ப சம்பந்தமான கடிதம்.

ஆசிரியர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

மாணவர்கள் நெட்டுருச் செய்தோ அல்லது ஏற்கெனவே வகுப்பில் அப்பியசிக்கப்பட்ட எழுதும் கட்டுரையைப் பற்றி ஆசிரியர்கள் நியாயமாய் மதிப்பிடுவதென்பது முடியாத காரியம். ஓர் விஷயத்தைப் பற்றி கொடுக்கப்பட்ட குறிப்புகள், விஷயச் சுருக்கும் (அரைகுறையாக) இவைகள் கொடுக்கப்பட்டு அதைப் பின்பற்றி மாணவர்கள் எழுதும் கட்டுரையைப் பற்றியும் அவ்வளவு நேர்மையாய் மதிப்பிட முடியாது. ஆகையால் மாணவர்களின் சொந்த பாஷையின் நடையைத்தான் மதிப்பிட வேண்டும். இதுதான் கட்டுரையின் பிரதானமான அம்சம்.

முடிவுரை.

ஆகவே கட்டுரை எழுதும் சக்தியை மாணவர்களுக்கு எவ்வாறு விருத்தி செய்வது; அவர்களது கட்டுரையை நேர்மையாய் மதிப்பிட்டு மார்க்குகள் கொடுக்கும் முறையென்ன; இவைகளுக்கான சோதனைகள் என்னென்ன போன்ற பிரதானமான விஷயங்களை ஆசிரியர்கள் முதலில் நன்றாய் ஆராய்ச்சி செய்து கொண்டு அதன் பிறகுதான் கட்டுரை எழுதக் கற்பிக்க வேண்டும். இன்றேல் பயனில்லை. கட்டுரைகள் அனேகம் மாணவர்களால் எழுதப்பட்டு வெகு அழகாகவும் ஆசிரியர்களால் திருத்தப்பட்டு மதிப்பிடப் பட்டிருக்கும். வருஷாந்திரப் பரீட்ஷை அல்லது சர்க்கார் பரீட்ஷைகளில் கேட்கப்படும் விஷயத்தைப் பற்றி கட்டுரை எழுத பெரும்பான்மையான மாணவர்களால் முடிவதில்லை. ஒருவாறு எழுதினாலும் பாஷையின் நடை இனிமையாய் இருப்பதில்லை. இதையெல்லாம் ஆசிரியர்கள் நன்றாய் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும். அவ்வாறு ஆராய்ச்சி செய்து பார்த்தால்தான் மாணவர்களின் கட்டுரை சிறந்ததாக விளங்கும்.

பழக்கம்

"அரங்கன்"

பூமியில் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பழக்கத்தால் பழக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய கைகால்களை நாம் எவ்விதம் பழக்கி கொண்டு வருகின்றோமோ, அப்பழக்கங்களை நாம் பழகப்பழக-நம் உறுப்புகளே அவைகளைத் தவறாமல் செய்கின்றன. வாழ்க்கையில் நம்மால் பழக்கப்பட்ட வேலைகளை மறுபடியும் மாற்றிச் செய்ய கொஞ்சத்திலியலாது. எக்காரியமானாலும், அதை நாம் பழக்கத்தின் மேல் செய்ய சுலபமாய் முடியும். நன்றாய் ஒரு வேலையை பழகினவனிடம், அவ்வேலையைப் பற்றி நன்றாய் புஸ்தகத்தில் படித்தவனால் போட்டியிட முடியாது. அப்படி போட்டியிட்டு வேலை செய்ய முற்பட்டாலும், பழக்கப்பட்டவன் செய்த வேலை நன்றாகவும், சுத்தமாகவும். போற்றத்தகுந்த விதத்தில் இருப்பது போல் படித்தவன் செய்யும் வேலைத்திறமிருக்காது என்பது நிச்சயம். மிகவும் வயதானவன் மிக்க கடினமான வேலை செய்யும் பொழுதும் நாம் பார்த்து இருக்கின்றோம். நடக்கக் கூட நாடியில்லாதவன் பழக்கத்தில் செய்யும் ஒரு வேலையை வலுவுள்ளவனால் கூட செய்ய முடியாது.

சர்க்கஸ்க்காரன் ஒருவனை ஒரு இடத்தில் நிற்க வைத்து, கண்ணை மூடிக்கொண்டு, நிற்பவன் உடலில் உராயும் படியாக தன் கையிலுள்ள கூரிய கத்திகளை மூன்று கஜம் தள்ளி நின்றுக்கொண்டு வீசுகிறான். பார்த்திருக்கிறோம் அனைவரும். ஒரு கத்தியாவது தவறி நிற்பவன்மேல் படுவதில்லை-உடலின் உராயுமிடத்திலிருந்து தள்ளியும் வந்து தைப்பதில்லை-எல்லா கத்திகளும் நிற்பவன் உடலை ஒட்டியே வந்து தைத்துக் கொள்கிறது இன்னும் இதைப்போல் பற்பல அபூர்வமான, அதிசயிக்கத்தக்க, வேலைகளை எல்லாம் செய்துக் காட்டுகின்றார்கள். பெண்களும் குழந்தைகளும் மிருகங்களும் தவறாமல் தங்களால் பழக்கப்பட்ட வேலைகளைச் செய்கிறார்கள். சிறு பிரயாயம் முதல் கவனமாய் பழக்கிக் கொண்டதால் தான் எக்காரியங்களையும் தங்கு தடையில்லாமல் செய்ய முடிகிறது.

பற்பல தொழிற்சாலைகளில் வேலை செய்யும், படிக்காதவனாகிய-ஆனால் நன்றாய் பழக்கப்பட்ட ஒரு தொழிலாளிக்குத் தெரிந்த தொழில் நுணுக்கம் அத் தொழிலைப் பற்றி படித்தவனுக்கும் இருக்க முடியாது.

எக்காலமும் எப்பொழுதும் எதையாவது ஆராய்ச்சி செய்துக் கொண்டு, பற்பல விஷயங்களைப் படித்துக் கொண்டு, எழுதிக் கொண்டு இருப்பவனுக்கு இருக்கும்-அறிவு வளர்ச்சி மற்றவர்களுக்கிருக்க முடியாது.

எப்பாஷையாகிலும், அதைப் பேசியும், காதால் கேட்டும், பழக்கப் பட்டு விடில் அப்பாஷையை படித்தவனை விட சுலபமாய் அர்த்தம் செய்துக் கொள்ள முடியும். ஆங்கிலேயர் வீட்டில் வேலை செய்யும் தமிழர்கள் இதற்கு உதாரணம் சொல்லலாம்.

எந்த விஷயத்தையும் தவறாமல் பேசிப் பழக்கிக் கொண்டால் தங்கு தடையில்லாமல் பேசலாம். அடுக்கு பதங்களையும், அழகுப் பதங்களையும், ஹாஸ்யவார்த்தைகளையும் பேசிப் பேசி பழக்கிக் கொண்டால், அற்புதமாக அவைகளை உபயோகித்துப் பேசலாம். எவ்விதமாக நாவானதுப் பழக்கப் படுகிறதோ எவைகளை நாம் தினமும் பேசுகின்றோமோ-அவைகளை மறக்காமல் நாவானது பேசும். தத்தித் தத்தி பேசப் பழக்கிப் பாருங்கள் நாவை. நாளடைவில் அவ்விதமே பேசலாம். பிறகு அதை மாற்ற சுலபத்தில் முடியாது-கொனஷ்டை வார்த்தைகளைப் பேசி பழகிக் கொண்டால், நல்ல வார்த்தைகள் மறந்து-மறைந்து, நாம் பழக்கிக் கொண்ட கொனஷ்டை வார்த்தைகள்

முன்னே ஓடிவரும்! மிருகங்கள் பக்ஷிகள் முதலியவை பேசுவது போலவும், மற்றவர் பேசுவது போலவும், பழக்கத்தின் மேல் சிலர் பேசுவதை கேட்டிருக்கலாம். பல மைல் தூரமுள்ள ஊர்களானாலும் நடந்துப் பழக்கப் பட்டவர்கள் வண்டி ஏறாமலேயே நடந்து சென்று விடுகிறார்கள். அதைக் கேட்டு நாம் ஆச்சரியந்தான் படவேண்டியிருக்கும். வேணுமென்றே கால்களை சாய்ந்து-உடலை கோணி நடக்கக் கற்றுக் கொண்டாலும், அதே நடைதான் உண்டாகும் நாளடவில். "பெரும் ஆற்று வெள்ளத்தில்-நீந்தி அக்கரை போய் விட்டான். சமுத்திரத்தில் குதித்து நீந்தி கரை சேர்ந்து விட்டான்" என்று கேள்விப் படுகிறோம். கண்ணாலேயே பார்க்கிறோம். இவைகளும் அவர்களின் உடல் பழக்கத்தால்தான்-தண்ணீரில் மூழ்கி பல நிமிஷ நேரமிருந்து கிணற்றினுள் இருந்த வஸ்துவை வெளியே கொண்டு வருகிறார்கள். நம்மால்-ஒரு நிமிஷம் கூட தண்ணீரில் மூழ்சியிருக்க முடியவில்லை. 24 மணி நேரம் பூமி உள்ளே பள்ளத்தில் கிடந்து யோகம் செய்தான் என்பதும், ஆகாயத்தில் நடந்தான் என்பதும், மிக்க பாரமுள்ள பாறையை ஒற்றைகையால் கிளப்பினான் என்பதும், இம்மாதிரி பல அரிய பெரிய காரியங்கள் எல்லாம் பழக்கத்தின் காரணத்தால்தான் செய்ய முடிகிறது.

வேகமாக அச்சு கோர்ப்பதும், மிகவும் அழகாக வர்ணம் தீட்டுவதும், நுணுக்கமான வேலைகள் செய்வதும் பழக்கத்தின் காரணத்தால் தான். குருடர்கள் படிப்பதும், பாய், கூடை பின்னுவதும், தறி நெய்வதும்-பழகத்தின் செய்கையால்தான் செய்ய முடிகின்றது.

ஆங்கிலேயன் இந்தியரை அடிமையின் காரணமாக பற்பல மேன் பட்ட தொழிலில் பழக்காத காரணத்தால் தான், இந்தியா பழய தொழில் முறைகளை மறந்து. உலக தொழில் முறைகளை துறந்து, அவைகளில் பழக்கமில்லாமல், தொழிலுல்களில் உலகத்திலேயே பின்னடைந்து நிற்கிறது-விஞ்ஞானத்திலும், அறிவிலும், செல்வத்திலும், விரித்தி அடையாமல் எல்லாவற்றிலும். வறுமை அடைந்து நிற்கிறது என்பதையும் இங்கே குறிப்பிடுகிறேன். ஒருவன் உலகில் வாழ்வதற்கும் தாழ்வதற்கும் முக்யமானது-அவனுடைய பழக்கமேயாகும்.

மனிதர்களைப் போலவே தான் மிருகங்களும்-பறவைகளும். அவைகளை எந்த விதம் நாம் பழக்குகின்றோமோ-அவ்விதமே அவைகள் பழகிவிடுகின்றன. கிளி பேசுவதும், குயில் பாடுவதும், யானையும் சிங்கமும் ஓரே இடத்தில் சந்திப்பதும், ஆட்டையும் புலியையும் அளவளாவ வைப்பதும், பழக்கத்தால்தான் புலியை நம் வீட்டில் வளர்த்தால் அதற்கு புலியின் குணம் இருக்காது. புலியைப்போல் அது கொடுமையான காரியங்களை செய்யாது-இம்மாதிரி பல அதிசயக் காரியங்களை பழக்கத்தின் மேல் காணலாம்.

இரவு காலங்களில் வண்டி இழுத்துச் செல்லும் மாடுகள், வண்டிக்காரன் தூங்கி விட்டால், தன் பழக்கப்பட்ட வழியை விட்டு மாறாமல் அதுவாகவே சென்றுக்கொண்டிருக்கும். எதிரேவரும் வண்டிகளுக்கு ஒதுங்கி, வழி மாறி பாதையை விட்டு பள்ளத்திலிறங்காமல் வழக்கமாங் போய்ச் சேருமிடத்திற்கு தவறாமல் போய்ச் சேரும். இதுவும் மாடுகளின் பழக்கத்தின் காரணமாகத்தான்.

நல்லவர்களுடன் சேர்ந்தால் கெட்டவனும் கொஞ்சம் கொஞ்சமாக திருந்தி விடுவான். நல்லவர்களின் தூய்மையான வழக்கங்களில் மனம் செலுத்தியும், அவர்களுக்கு அஞ்சி-அதன் படி நடந்தும். அவன் தூர் பழக்கங்கள் துலைந்து நல்லவனாகி விடுவான் கெட்டவர்களுடன் நல்லவன் சேர்ந்தாலும் இதே கதைதான். இந்த உண்மையின் அடிப்படையின் மேல்தான் "சேரிடம் அறிந்து சேர்" என்றும், "நல்லாரைக் காண்பதும் நன்றே, என்றும்தீயாரைக் காண்பதும் தீதே, என்றும் பாடியுள்ளார்கள்.

ஆகையால், மாணவர்களை ரொம்ப ஜாக்கிரதையாய்ப் பழக்குங்கள். விளையாட்டுக்குகூட அவர்களை கெட்ட வழியில், தூர் நடத்தையில் பழக்க வேண்டாம். அதுவே அவர்களுக்கு பாடமாகி விடும்.

மாணவர்களே-உங்களுக்கும் சில வார்த்தைகள் சொல்லுகிறேன். நீங்கள் சிறுவயதில் எவ்விதம்பழக்கப்படுகின்றீர்களோ எந்த வழியில் உங்களின் உறுப்புக்கள்-பழக்க பட்டிருக்கிறதோ, அதை மாற்ற

முடியவே முடியாது. ஆகையால் நீங்கள் கெட்ட வழிகளில் விளையாட்டுக்காகக் கூட சிநேகிதர்களின் வார்த்தைக்காகக்கூட பழக வேண்டாம். விளையாட்டு பழக்கத்தில் ருசியை கண்டால் அதுவேவிருத்தியாகி பெரும்வினைப்பழக்கமாகி உங்களை அழித்து விடும். நல்ல வழியில் பழகுங்கள் சிறுவயது முதல். நியாயமானதும் சத்தியமானதுமாகிய நற்காரியங்களில் உங்களின் உள்ளத்தையும் உடலையும் பழக்குங்கள். நல்லவருடன் சேருங்கள். நல்லவைகளை கேளுங்கள், நல்லவைகளைப் பேசுங்கள். நல்லவைகளை படியுங்கள், என்றும் அவைகளினால் நீங்கள் நன்மை அடைவீர்கள்.

நல்ல தொழில் முறைகளில் உங்களைப் பழக்கப் படுத்திக் கொள்ளுங்கள். மற்றவரையும் யும் பழக்குங்கள். ஒரு நிமிஷம் கூட வீணாக்காமல், உங்கள் உறுப்புகளை உண்மை உழைப்பிற்காகவே உலகில் பழக்கப் படுத்திக் கொள்ளுங்கள். அப் பழக்கமானது ஒருக்காலமும் உங்களை விட்டு நீங்காது.

தேசத்திலுள்ளவர்கள் எல்லோரும் சகோதரர்கள் என்ற மனப்பான்மையில் பழகுங்கள் விரோத பாவத்தில் உங்கள் எண்ணத்தை பழக்க வேண்டாம். எல்லாரிடத்தும் அன்பாயிருக்க பழக்குங்கள், எவரிடத்தும் வன் சொல்லை உபயோகிக்க பழக்க வேண்டாம். என்றும் தூய்மையாயிருக்கப் பழக்குங்கள். எதனாலும் பேய் மனம் கொள்ள பழக்க வேண்டாம். நல்ல ஒழுக்கத்தில் நீங்கள் பழகினால் ஒருக் காலத்தும் இழுக்கம் அடைந்து வாழ்க்கையில் வழுக்கி விழமாட்டீர்கள். என்றும் எங்கும், உங்கள் கீர்த்தியும், நாட்டின் கீர்த்தியும் வெற்றியுடன் ஆனந்த முழக்கம் செய்யு மென்பதில் சந்தேகமே யில்லை.

உழைப்பதும்உன்உடல்பழக்கம், உலகில்
பிழைப்பதும்நின்தொழில்பழக்கம், குலம்
தழைப்பதுமுன்குணப்பழக்கம், துன்பம்
இழைப்பதுமுன்செயல்பழக்கமே.

———

ஒவ்வொருவரும் பிறந்ததுமுதல் இறக்கும்வரையில் ஏதாவது ஒருவேலையை செய்துக்கொண்டேயிருக்க வேண்டும். எந்த விஷயங்களையும் படித்தாராய்ந்து பலன் பெறவேண்டும். உலகில் பெரும்புகழை நல்வழியில் அடைவதற்காகப் பாடுபடவேண்டும். முயற்சி செய்யவேண்டும். இவை அனைத்தும் விட்டுவிட்டு தானே சாப்பிட்டு, கஷ்டமின்றி வசித்து, எப்பொழுதும் சுறுசுறுப்பின்றி தூங்கி விழுந்துக்கொண்டு—சோம்பேரியாகி ஊர்சுற்றிக்கொண்டு, பொய், களவு, சூது, வாது முதலிய கெட்டப்பழக்கங்களிலீடுபட்டு தானுமின்னலுற்று, நாட்டையும் கெடுத்துக்கொண்டு, அவன் உலகில் இருந்து வாழவே தேவையில்லை. மடியலாம். அப்படிப்பட்டவனுக்கு உலகில் வாழ இடமளிக்காதீர்கள்.—(ஸ்ரீவத்ஸன்)

ஸங்கீதப் பகுதி.

K. S. Rajam Iyengar, (Disiple of Ariyakudi Ramanuja Iyengar, Diploma.)

கர்நாடக ஸங்கீதத்தின், ராக லக்ஷணங்களிலுள்ள, கமகம் (கமதம்) மூர்ச்சனை, சகுபிகு இவைகளைக் கூடிய வரையில் வர்னங்களிலேயே கையாண்டு வரும் வண்ணம், முக்கியமான அடையாளங்களுடனும் தாளத்தின் ஒவ்வோர் ஆவர்த்தமாகவும், பல ராகங்களில் எனது பழக்கத்திலுள்ள 100 வர்னங்களை, ஸங்கீதஸ்தர்களுக்கும், ஸங்கீதவகுப்புக்களுக்கும் பிரயோஜனப்படும் வகையில், ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகள் கிருபையால் தொடர்ந்து வெளியிட முன் வந்துள்ளேன். எவ்விதப் பிரதிப் பிரயோஜனமுமின்றி ஆர்வங்கொண்டுள்ள எனக்கு கல்வி பத்திரிகை இடமளித்துள்ளது போல், ஒவ்வொரு ரசிக உள்ளமும் 'கல்விக்கு' இடமளிக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நவராகமாலிகா. மேளம். 36

ச. திருபுடை. நாட்டை

1. பா மா ரீ " ஸநி ஸரி ஸஸ நிப நிநி ஸரி ஸ
இ ந் த கோ ——————— ப ———
மரிஸ ப ம ரி ஸா ரி க ம
—— ல —— ரா ————

2. பா ம நி ப ஸ நி ப ம க ம ப த நி ஸா. ப ஸா நி ப
இங் — தி — நீ ———————— பை ———————— ஸா ——மி
ஸ நி பா மரி ஸா ரிகம
—— நீ —— கு ———

கௌளை. மேளம் 15

3. ஸா பா . ப ம க ம ரீ ஸநி ப நி ஸரி ஸா ரிகம
செந்த ———————— ஜே ——————— ர்ச்சி நா——
ரி ம ப நி ம ப நீ ஸா
மு — பங் —— த ——

4. ப நி ஸ ரீ ரி. பமகம ரி ஸ நி. ப நி ஸ ரி ஸ
மே ———— ல —— ரா ——— ஸ்ரீ—கா—ள
ஸா நி. ப. ஸ நி பா ம க ம ரி க ம
———— ஹ —— ஸ்தே — ஸ்வ — ரா —

வராளி. (சிட்டாஸ்வரம்.) மேளம் 39.

பா ம த பம கா ரிரி ஸநி தப தநிஸா' ரிரி ஸ கரிகா மா ப த ப ம

கா ரிஸ ககரிக ம ப த ப நி நி தப த நி ஸா ப த மப கரிக ம பமபா

ஆரபி மேளம். 29—கூடியவரை நிஷாத வர்ஜ்யம்

மகரி ஸரி மகரி பாம கரி மபத ரிம ப த. ஸரி ம ப த. த ப ம ப த ஸா

ப த ஸரீ ரி ஸரி ம கரி ரீ ரி. ஸரி ஸ. ஸா ஸ த த ப. பா ப மகரி ஸரிம(இந்த)

சிட்டைப் பல்லவி

ஸ்ரீராகம். மேளம். 22.

பா ரீ ஸா. ஸநி பம பநி ஸநி ஸா நீ' ரிஸநிபாம

ப ஞ்சாக்ஷ ரு—ணி பா—— ரி. கோர்வ — ஜால

ரிகரி ஸா ரி ம

——து——ரா

1. பா 'நீ ' மா" பா" ரீகா' ரீ' ஸா" ரீ'' மா

(பஞ்சாக்ஷ)

நாராயண கௌளை. மேளம். 28.

2. பா நித நி ஸ நித பத மபமா மக ரிகரி

ஸாநித ப நித.நிஸா ரீம (பஞ்சாக்ஷ)

ரீதிகௌளை. மேளம். 20.

3. நிநி தம கரிகம தபமகரி ஸநிப நிஸா நிகரிகம

நிநி தம நிநிஸா

நிஸகரி கமகரி கா கரி ஸநி கரி நி ஸா நிதம.

மாகரி ஸநி கரிகம (பஞ்சாக்ஷ)

4. தோடி. (சொந்தம்) மேளம். 8.

கமநிதா த. கமதமாக ரிகமாகரி ஸரிகஸாரி

நிஸ த நீ கரி.ரி

கா த கரி மக நித கமத. தநி தநிஸ. த க ரி

ஸரி நி ஸ த நி த மகரிகம (பஞ்சாக்ஷ)

5. பிலஹரி சொக்தம் மேளம். 29.

பாத ரி ஸநிதபா மகரி. ஸா ரிகபா

மக.கரிஸா. நித.தப மகரிக.

தமகரி ஸநி தஸா. ஸரிகபமகரி ககபபததஸா

ஸநித ரிஸா ''

ஸா ரி காக. க ரி ஸநி தத ரீ. ரீ. ஸநிதபதா.

தா பமகரிகா. ஸரி—

கபதஸரி கபம கரி. ஸரிக ஸகரி ஸநித

பதரிஸநிதப. தபமகரிக. (பஞ்சாக்ஷ)

குறிப்பு:—

ராகலக்ஷணங்களையும், மூர்ச்சனைகளையும் எழுத்தின் மூலமாகக் கற்பது மிகச்சிரமமே யாதலால், இதில் குறிக்கப்பட்டிருக்கும் சில அடையாளங்கள், ஓரளவு ஸங்கீதத்தில் அனுபவமுள்ளவர்களுக்கே வெகுவாகப் பயனளிக்கும். அவர்களின் முயற்சியினால் கல்லூரி வகுப்புக்களுக்கும் உண்மை முறைவிளங்கும்.

அடையாளங்கள்.

〰 = கமகமாக அநுஸ்வரங்களுடன் அசைத்து பிடிக்கவேண்டும்.

〰 = ஷ அசைவுடன் சுகுமகுவும் கொண்டது.

. = சஞ்சார ஓதுக்கங்கள்.

⌒ = மேல்ஸ்தாயி. ‿ = கீழ் ஸ்தாயி.

முக்யமாக, ராகஸ்வரூபம் பூர்ணமாக விளங்கும்படி — ஸ்வர, ஸாஹித்தியங்களைக் கையாளும்போதுதான், நமக்கும், கேட்போருக்கும் இன்ப உணர்ச்சியுண்டாகும்.

லால்பத்தி—ரெட்லைட் (செஞ்ஜோதி)

ஜனதா சித்ரா—பம்பாய்.

பிரகாஷ், ராஜ்குமாரி, பூல்ராணி முதலியோர் திறம்பட நடித்த உன்னத படம்.

ஸ்டண்ட் படமாக மாத்திரமிராமல் நீதியை நிலைநாட்டவும், எளியவர்களுக்கு உதவும் கருத்துக்களை உடையதாகவுமிருக்கிறது. ஹிந்திவழக்கமற்ற பிரதேசங்களில் ஹிந்திப்படங்களை புரியவைக்க புதுமுறையில் இடையிடையே தமிழில் விளக்கம்கொடுத்து அனைவருக்கும் புரியும்படி செய்கிறது. இவ் அபூர்வபடம் முதன் முதலில் இப்போழுதுதான் திரையிடப்படுகிறது. 40, அல்லது 45 சதவிகிதம், இதற்கு திரையிடும் உரிமை அளிக்க இயலும். இன்னும் உயர்தர ஹிந்தி தமிழ் படங்கள் எங்கள் கைவசமுள்ளன.

விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

72. அரண்மனைக்காரதெருவு
மதராஸ் 1.

நால்வகைப்படுவன

"ஸ்ரீவத்ஸன்"

(1) வேதங்கள் நான்கு
ருக்வேதம், யஜுர் வேதம், சாமவேதம், அதர்வன வேதம்.

(2) முக்கிய திக்குகள் நான்கு
(1) கிழக்கு (2) மேற்கு (3) தெற்கு (4) வடக்கு.

(3) முக்கிய ஜாதிகள் நான்கு
(1) பிராமணர் (2) க்ஷத்திரியர் (3) வைசியர் (4) சூத்திரர்.

(4) சேனைப் பரிவாரங்கள் நான்கு
(1) ரதப்படை (2) யானைப்படை (3) குதிரைப்படை (4) காலாட் படை

(5) மனித வர்க்கத்துக்கு கிடைக்க கூடிய பெரும் பதவிகள் நான்கு
அறம், பொருள், இன்பம்—வீடு (தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்)

(6) ஷை பெரும் பதவிகளை அடைய மனிதன் செய்யவேண்டிய உத்தம நியமங்கள் நான்கு
விரதம், ஹோமம், யாகம், எக்கியம்.

(7) ஆழ்வார்களில் முக்கியமானவர்கள் நால்வர்.
(1) பேயாழ்வார் (2) பொய்கை ஆழ்வார் (3) பூதத்தாழ்வார் (4) நம்மாழ்வார்.

(8) யுகங்கள் நான்கு,
த்ரேதாயுகம், கிரதயுகம், துவாபரயுகம், கலியுகம்,

(9) உலகில் வாழ் ஜந்துக்கள் நான்கு.
ஊர்வன, பறப்பன, நீந்துவன நடப்பன,

(10) ஒருநாளின் கணக்கிற்கு முக்கியமானது நான்கு
செகண்டு, நிமிடம், மணி, நாள்.

(11) ஒருவருடகணக்கிற்கு முக்கியமானது நான்கு.
நாள், வாரம், மாதம், வருடம்.

(12) வெளியூர் பிரயாணம் செல்லும் பொழுது முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயங்கள் நான்கு
வாரசூலை, ராகுகாலம், நக்ஷதிர யோகம், சகுனம்,

(13) காங்கிரஸிற்கு முக்கிய தூண்களைப் போன்றவர் நால்வர்
காந்திஜீ, நேருஜீ, பட்டேல்ஜீ, ராஜாஜீ, (காந்தியார் அமரராகி விட்டாலும் அவரின் அற்புத மொழிகளின் பலத்தால் அந்தத் தூண் விழாமல் நிற்கும்)

(14) உலகில் முக்கியமாய் சூழ்ந்திருப்பவை நான்கு.
கடல், மலை, சமவெளி, நதிகள்.

(15) ஒருவனை நல்வழிக்கு திருப்பச் செய்ய கையாளும் மார்க்கங்கள் நான்கு. சாம, பேத, தான, தண்டம்,

(16) கி. மு. 300 வருஷத்தில் பண்டைய நாகரிக காலத்தில் ஆற்றுப்பாசன நாடுகள் நான்கு. பாபிலோன், எகிப்து, ஸிந்து, சீனு,

(17) தமிழ்நாட்டின் கோவில்கள் வளம் பெற்று முடிவடைந்தது நான்கு. மன்னர்களின் ஆட்சி காலத்தில். சோழர், பாண்டியர். பல்லவர், விஜயநகர மன்னர்கள்

(18) மனிதன் வாழ்க்கையில் அடையு மாறுதல் நான்கு. குழந்தை, குமரன், யௌவனன் கிழவன்.

(19) மனிதனுக்கு வேண்டிய முக்கிய குணங்கள் நான்கு, நட்பு, தயை, கொடை, வீரம்.

(20) உலக மகா வீரர்கள் நால்வர். அலெக்ஸாண்டர், நெப்போலியன் ஹிட்லர், சுபாஸ் சந்திர போஸ்,

(21) உலகில் மக்கள் முக்கியமாய் கற்கவேண்டிய கல்வி நான்கு. தொழிற்கல்வி, விவசாயக் கல்வி, சட்டக்கல்வி, விஞ்ஞானக் கல்வி.

(22) உலகின் செல்வங்களின் விதம் நான்கு, கல்விச்செல்வம், பூமிச் செல்வம், தானியச் செல்வம், ரொக்கப் பணம்.

(23) ஒரு வீட்டிற்கு முக்கியமாய் வேண்டியவை நான்கு. சுவர், கூரை, தூண்கள், கதவு.

(24) ஒரு வீடுகட்ட அவசிமாய் வேண்டுபவை நான்கு. மரம், மண், கல், தண்ணீர்.

(25) கனவில்கூட தூர்எண்ணத்துடன் கருதக்கூடாதபெண் தெய்வங்கள் நால்வர். குருமனைவி, ராஜபத்தினி, அண்ணன் பாரியாள், நண்பனின் இல்லாள்.

(26) பெண்களுக்கிருக்க வேண்டிய முக்கிய குணங்கள் நான்கு, அறிவு, வெட்கம், அன்பு, இனிமை.

(27) முக்கியமான இந்திய சுதந்திர கவிகள் நால்வர், பாரதியார், நாமக்கல் கவிஞர், சரோஜினி நாயடு, ரவிந்திரநாத் டாகூர்,

(28) எல்லாகிராமங்களிலுமிருக்க வேண்டிய முக்கிய சாலைகள்- நான்கு. பள்ளிச்சாலை, வைத்திய சாலை, பாதுகாப்புச்சாலை. தொழிற்சாலை.

(29) கிராமங்களின் ஆரோக்கியத்திற்காகவும், சௌகரியத்திற்காகவும் முக்கியமாயிருக்கவேண்டியவை நான்கு. குளிக்கக் குளம், குடிக்க குளம், விளைநிலங்கள். ஏரி.

(30) மனதில் கிளம்பும் எண்ணங்களை எழுதஉதவிய முக்கியசாதனங்கள் நான்கு. கற்களில் செதுக்கியது, உலோகத்தகடுகளில் பொறித்தது ஓலைச்சுவடிகளில் எழுதியது. காகிதத்தில் வரைவது.

இதுபொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்!

(ஓர் அற்புத தயாரிப்பு)

மாய மோதிரம்.

இந்தமோதிரம் மந்திரசக்தியினால் தயாரிக்கப்பட்டது. இது மிக அபூர்வவேலைகளைச் செய்யும். எவ்வளவு கடினமான காரியங்களிலும், இதை அணிபவர்கள் வெற்றியடைவார்கள். உங்களுக்கு ஏற்படும் எந்தவிதமான ஆபத்துகளிடமிருந்தும், வியாதிகளிலிருந்தும் காப்பாற்றும். கெட்ட க்ரகங்களிடமிருந்து பயம் உண்டாகாது. இம்மோதிரத்தை யணிபவர்களைக்கண்டால், கல்மனமும் கரையும். வசீகரத்தன்மையுண்டாகும். காதல், கோர்ட்டு வியாஜ்யம், ஊழியம் இவைகளில் வெற்றிப்பெற்று நிறைய பணம் சம்பாதிக்கலாம். சுருங்கச்சொல்லின், இம்மோதிரம் உங்களுக்கு ஒருமெய்க்காப்பாளனைப் போன்றது.

ஒருமுறை பரீக்ஷைசெய்து பாருங்கள். முதலிரவே ஆச்சரியமான பலன் தெரியும்.

விலை ரூ. 1-15-0. பிரத்தியேகமானது ரூ. 3-0-0.

பிரத்தியேக அபூர்வசக்திவாய்ந்தது ரூ. 3-15-0.

தபால் சிலவு தனி. குணமில்லையாகில் பணம் வாபஸ்.

PRINCIPAL, SHINING MESMERISM HOUSE,
(K. M.) KARTARPUR (E. P.)

நாட்டின் நண்பன்

"நாதன்"

(1) கூட்டம்போட்டு கூடிபேசி குடியரசு வந்ததென்கிறார்
வீட்டைநன்றாயலங்கரித்து வீதியழகாய்ச் செய்கிறார்.

(2) ஓட்டமாக ஓடியாடி உயரக்கொடியை தூக்குகிறார்
எதேட்டமானபுகழ் மொழிகள் எழுதெழுதித் தள்ளுறார்.

(3) பாட்டுப்பாடி பலவிதமாய் பஜனைகளெங்கும் செய்யுறார்
நோட்டுடனே புதுசின்னங்கள் நோக்கிநோக்கி மகிழுறார்.

(4) ஆட்டமாடி ஆனந்தமாய் ஆலயம்சென்று வேண்டுறார்.
வாட்டமில்லா வாழ்வுகொள்ள வாயால்திட்டம் போடுறார்.

(5) கேட்டுநின்று அனைவருமாய் கைக்கொட்டி நின்றாலாகுமா
ஏட்டைப்படித்து பஞ்சம்தீர்க்க ஏங்கியழுதால் போகுமா.

(6) தோட்டமுடன் துரவும்செய்து துரிதமாய்ப்பஞ்சம் நீக்குவோம்
மேட்டைவெட்டி பண்படுத்தி மென்மேலும் பயிர்செய்குவோம்

(7) காட்டை வளமாக்கிபின்பு கர்சினி வளமாக்குவோம்
மாட்டைப்போற்றி நிலமுழுது மாட்சி பெற்றுவாழ்குவோம்.

(8) கூட்டுப்பண்ணைகள் வைத்திடாமல் குருட்டுவழியில் செல்வதேன்
கோட்டைக்கட்டி நெஞ்சதிலே கோரிவீணாய் திரிவதேன்.

(9) வேட்டைநாய்போல் சண்டையிட்டு வேதனைப்பட்டு சாவதேன்
தீட்டிக்கத்தி கையில்கொண்டு தீயராய் அலைவதேன்.

(10) சீட்டுக்கட்டி செல்வம்சேர்த்து சீராய்தொழில்கள் புரிகுவோம்
ஊட்டிஅன்பை உலகிலெங்கும் உறுதியாய் முன்செல்குவோம்.

(11) நீட்டிக்காலை குந்தியிருந்து நிமிஷமும் பாழாய்செலவிடோம்
போட்டியிட்டு பதவிபெற்று பொய்வழியில் சென்றிடோம்.

(12) சாட்டைக்கொண்டு ஒருவரையும் சாடிஅடிமை யாக்கிடோம்
நாட்டைக்கார்க்கும் நண்பனும் நன்அஹிம்சையை மறந்திடோம்.

Edited, Printed and Published by S. Gopalakrishnan at New Era printers 72, Armenian Street.

- Managers, Correspondents -

Your printing problems solved

All kinds of printing undertaken

Do you require

Letter heads,
Forms for every purpose
School day programmes,
etc. etc. etc.

Write for your requirements
with full particulars
to

THE MANAGER

THE NEW ERA PRINTERS,

72, ARMENIAN STREET, MADRAS-1.